# பிரதேச சாகித்திய விழா
# 1998
# ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල

சிறப்பு மலர்

විශේෂ කලාපය



பிரதேச செயலகம்
பட்டணமும் சூழவும்
திருக்கோணமலை

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය
නගර හා කඩවත්
ත්‍රිකුණාමලය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழா

# சிறப்பு மலர்

1998



வெளியீடு : பிரதேச செயலகம், பட்டணமும் சூழலும்
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழு

தலைவர்

**வ. வேலும் மயிலும்**

பிரதேச செயலாளர், திருக்கோணமலை .

உப தலைவர்

**திரு. க. தங்கராசா**

வலயக் கல்விப்பணிப்பாளர், திருக்கோணமலை

செயலாளர்

**திருமதி. ச. மகேந்திரராஜா**

பிரதேச கலாசார அலுவலர், திருக்கோணமலை

இணைப்பாளர்கள்

**திரு. க. துரைரெட்ணசிங்கம்**

உதவிக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வித்திணைக்களம், திருக்கோணமலை.

**திரு. எஸ். மகேந்திரராஜா**

மாவட்ட கலாசார அலுவலர் திருக்கோணமலை.

ஆலோசகர்

**திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்**

உதவிப்பணிப்பாளர், கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு

(வ. கி. மா.) திருக்கோணமலை.

**திரு. எஸ். அருளானந்தம்**

நிபுணத்துவ ஆலோசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாக்குழு உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| **திரு. சீ. எம். வரதராஜா** | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேச செயலகம் | திருமலை. |
| **திருமதி. பி. சுதர்சன்** | சமூகசேவை உத்தியோகத்தர் | பிரதேச செயலகம், | திருமலை. |
| **திரு. எம். பற்றிக் அன்ரனி** | கிராம சேவை உத்தியோகத்தர் | " | " |
| **திரு. ம. அ. அல்பிரட்** | " | " | " |
| **திரு. அ. சிவானந்தம்** | " | " | " |
| **திரு. ஆ. மகேஸ்வரன்** | " | " | " |
| **திரு. நா. ஜெயகாந்தன்** | " | " | " |
| **திரு. நா. சந்திரசேகரன்** | " | " | " |
| **செல்வி. த. வசந்தாலெட்சுமி** | தட்டெழுத்தாளர் | " | " |
| **திருமதி. றீற்ரா பெர்ணான்டோ** | எழுதுநர் | " | " |
| **செல்வி எல். நளினி** | தட்டெழுத்தாளர் | " | " |
| **திருமதி. பி. ரஜனி** | எழுதுநர் | " | " |
| **திருமதி. பி. இந்துமதி** | எழுதுநர் | " | " |
| **திரு. பி. ரவீந்திரன்** | நன்னடத்தை உத்தியோகத்தர். | | |

| | |
|---|---|
| **திரு. கே. ஜீ. ஜயதிலக்க** | உதவிக்கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வித்திணைக்களம் திருமலை. |
| **திரு. க. அரியநாயகம்** | திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் வலயக்கல்விப் பணிமனை " |
| **திரு. க. சதானந்தம்** | திட்டமிடல் உதவியாளர், " " |
| **திரு. ஒ. குலேந்திரன்** | உதவிக் கல்விப்பணிப்பாளர் வலயக்கல்வித்திணைக்களம் " |
| **ஜனாப் எம். எம். எம் காசிம்** | அதிபர்/தி/அல் மதீனா வித்தியாலயம் நாச்சிக்குடா |
| **திரு. ம. இராசதுரை** | சேவைக்கால ஆலோசகர், வலயக் கல்வித்திணைக்களம் திருமலை |
| **திரு. க. யோகானந்தன்** | ஆசிரியர் தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி |
| **திருமதி. நா. சீதரன்** | ஆசிரியை தி/புனித மரியாள் கல்லூரி திருக்கோணமலை |
| **திரு. சி. காளிராசா** | ஆசிரியர் தி/விவேகானந்தா கல்லூரி திருக்கோணமலை |
| **திரு. பொ. அன்புரெட்ணம்** | பிரதி அதிபர் தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி |
| **திரு. தா. சிவானந்தம்** | ஆசிரியர் தி/விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம் திருமலை |
| **செல்வி. சு. ரவிச்சந்திரிகா** | ஆசிரியை தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி திருமலை |
| **திருமதி. ஜாப்பா பண்டார** | ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்வித்திணைக்களம், திருமலை. |

அட்டைப்பட ஓவியம்
**திரு. மா. சி. சிவதாசன்** ஆசிரியர் தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின்**

**மேலதிக செலயாளர் (இந்துசமய அலுவல்கள்)**

# திருமதி. இ. கைலாசநாதன்

**அவர்களின்**

# ஆசிச்செய்தி

இலங்கையின் முக்கிய நகர்களில் ஒன்றான திருகோணமலையில் பிரதேச சாகித்திய விழா சிறப்பாக நடைபெறுவதையும் அதனையொட்டி சாகித்திய விழா மலரொன்று வெளியிடப்படுவதையும் அறிந்து மகிழ்ச்சியடைவதுடன் ஆசிச்செய்தி ஒன்றை அனுப்புவதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் வாழும் பல்வேறு சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கும் திருக் கோணமலை முக்கியம் வாய்ந்த இடமாகும். அருள்நெறி பெருக்கி ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டும் ஆலயங்கள் நிறைந்த திருகோணமலையில் எமது பாரம்பரிய கலைகள் பன்னெடுங்காலமாக சிறப்போடு போற்றி வளர்க்கப்பட்டு வருகின்றன. அங்கு வாழும் மக்கள் இலக்கிய வளர்ச்சிக்காகவும், கலைகளின் வளர்ச்சிக்காகவும் அர்ப்பணிப்பு சிந்தனையுடன் ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு வருவதை நன்கறிவேன்

திருகோணமலையில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் திரு. வேலும்மயிலும் அவர்களும், ஏனையோரும் பிரதேச சாகித்திய விழா எல்லா வகையிலும் சிறந்த விழாவாக நடாத்துவதற்கும், அதையொட்டி வெளியிடப் படும் சிறப்புமலர் பல விடயங்களை உள்ளடக்கியதாக பயன்பாடு நிறைந்த மலராக வெளிக்கொண்டு வருவதற்கும் முயற்சியெடுப்பதைப் பாராட்டுகிறேன். சாகித்தியவிழா சாதனைகளை நிலைநாட்டும் விழாவாக சிறப்பு பெறுவதற்கும் சாகித்தியவிழா மலர் எல்லோரையும் திருப்திப்படுத்தும் நன்மலராக மலர்ந்து மணம் வீசவும் மனப்பூர்வமான ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

**திருமதி. இ. கைலாசநாதன்**
மேலதிக செயலாளர் (இந்து விவகாரம்)
கலாசார சமய அலுவல்கள் அமைச்சு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர்

# திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி

அவர்களின்

# ஆசிச்செய்தி

சாகித்திய விழா கலை, கலாசார மேம்பாட்டிற்கு வழிவகுக்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த விழா ஆண்டு தோறும் பிரதேச மட்டத்தில், மாகாண மட்டத்தில், தேசிய மட்டத்தில் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பாரம்பரிய கலை, கலாசார, பண்பாடுகளைப் பிரதிபலிப்பதும் சிறந்த எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுத்து அவர்களின் ஆக்கங்களுக்குப் பரிசளிப்பதும் இவ்விழாவின் முக்கிய கருப்பொருளாகக் காணப்படுகின்றது.

பிரதேச சாகித்திய விழா இப்பிரதேச மக்களின் இலக்கிய ஆற்றல் களையும் கலையாற்றல்களையும் வெளிக்கொணர்கின்றது. இந்த வகையில் வரலாற்றுப் பெருமை மிக்க "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த" திருகோணமலைப் பட்டணத்தில் நடைபெறும். சாகித்திய விழா இனிதே நடந்தேறி அனைவர்க்கும் பயனுடையதாக அமைய எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜி. கிருஷ்ணமூர்த்தி**
தலைமைச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு – கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்

# திரு. சுந்தரம் டிவகலாலா

அவர்களின்

## ஆசிச்செய்தி

வரலாற்றுப் புகழ்பெற்ற திருகோணமலைப் பிரதேசம் வங்கக்கடலை ஆடையாகக் கொண்டு சீர்பெற்று சிறக்கிறது. இப்பிரதேச கலாசாரசபை பிரதேச செயலாளரின் தலைமையில் சாகித்திய விழாவை சிறப்புறக் கொண்டாடுவது வரவேற்கத்தக்கது.

கல்வியால் மட்டுமன்றிக் கலையாலும் திருகோணமலைப் பிரதேசம் சிறப்புறவும், மாணவர்களிடையே கலை உணர்வையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தவும், பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும் மாணவர்களிடையே கலை இலக்கியப் போட்டிகளை நடாத்தி அவர்களுக்குப் பரிசில்களை வழங்கி ஊக்குவித்திருப்பது கலை வளர்ச்சிக்கு ஒரு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

இவ்விழா தொடர்பான சிறப்பு மலர் பல இதழ்களைத் தாங்கிப் பொலிவுறவும் பல அறிஞர்களுடைய ஆக்கங்களையும் போட்டியில் முதல் இடத்தைப்பெற்ற மாணவர் ஆக்கங்களையும் தாங்கி சிறப்புறவும் எனது நல்லாசிகள்.

**சுந்தரம் டிவகலாலா**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்

# திரு. எஸ். தில்லைநடராஜா

### அவர்களின்

# ஆசிச்செய்தி

ஆர்ப்பரிக்கும் அலைகடல் அருகே சைவ ஆலயங்களும், ஏனைய வழிபாட்டுத் தலங்களும் அருள்மணம் பரப்ப, தமிழ்பேசும் மக்களுடன் ஏனைய இன மக்களும் வாழும் திருகோணமலை நகரில் பிரதேச சாகித்திய விழா நடைபெறுவதும் அதனையொட்டி சிறப்புமலர் வெளியிடப்படுவதும் வரவேற்கத்தக்கதும் பெரும் பாராட்டுக்குமுரிய முயற்சியாகும்.

பாடல் பெற்ற திருகோணமலை மாவட்டம் எமது பண்பாடுகளை வளர்ப்பதுடன் பாரம்பரிய கலைகளையும் வளர்த்து பல்வேறு கலை இலக்கிய வடிவங்களையும் காலத்துக்குக்காலம் நமக்குத் தந்து மண்ணின் பெருமையை மற்றவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வப்போது தோன்றிய அறிஞர்கள் தமிழ் அன்னையின் வாழ்விற்காகவும், வளர்ச்சிக்காகவும், தமது பங்களிப்புக்களை நல்கி வந்துள்ளனர். இன்றும் திருகோணமலையில் வாழும் பல்வேறு அறிஞர்களும், கலைஞர்களும் கலை இலக்கிய, ஆர்வலர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக கொண்டாடப்படும் பிரதேச சாகித்திய விழா நீண்ட காலம் நினைவில் நிலைத்துநிற்க வேண்டுமெனவும், சாகித்திய விழா மலர் கனதியான. காத்திரமான ஆக்கங்கள் நிரம்பியதாக எல்லோர் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கவும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

(உடுவை) **எஸ். தில்லைநடராஜா**

பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
98, வோட் பிளேஸ்,
கொழும்பு-7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு – கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள்

விளையாட்டுத்துறை அமைச்சு

பண்பாட்டலுவல்கள் உதவிப்பணிப்பாளர்

# திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்

அவர்களின்

# ஆசிச்செய்தி

திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச கலாசார சபை இயற்கைத் துறைமுக வனப்பைத் தன்னகத்தே கொண்டது. அது மாத்திரமன்றி பாடல் பெற்ற வரலாற்றுப்புகழ் மிக்க திருத்தலமான கோணேஸ்வரத்தையும் இயற்கை அழகையும் பெற்று மிளிர்கின்றது. பிரதேச செயலாளரின் தலைமையின் கீழ் கலாசாரசபை சாகித்திய விழாவைச் சிறப்பாக கொண்டாட முன்வந்திருப்பது பாராட்டற்குரியது.

மாணவர்களிடையேயும், மற்றையோர்க்கும் கலை இலக்கிய ஆர்வத்தை வளர்க்கும் நோக்கோடு கலாசாரப் போட்டிகளைக் கலாசார உத்தியோகத்தர்கள் நடாத்தி முடித்துள்ளனர். பரிசளிப்போடு சாகித்திய விழா சிறப்புற நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும். விழாவோடு தொடர்பாகச் சிறப்புமலர் ஒன்றும் வெளிவருவது மேலும் விழாவிற்கு மெருகூட்டுவதாக வுள்ளது.

சாகித்திய விழா சிறப்பு மலர் நல்ல பல ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவது எமது பண்பாட்டு விழுமியங்களைக் கற்றோரும், மற்றோரும் அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது. கடந்த ஆண்டினைப்போன்று இவ்வாண்டும் சாகித்திய விழாவில் மூன்று இனங்களினதும் கலையம்சங்கள் பிரதி பலிக்கத்தக்க வகையில் நிகழ்ச்சிகள் இடம் பெறுவதும் நல்ல அறிகுறியேயாகும். எல்லாவகையிலும் விழா சிறப்புற அமைய ஆசி கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**எஸ். எதிர்மன்னசிங்கம்**
உதவிப்பணிப்பாளர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සාහිත්‍ය සැමරුම නිමිත්තෙන්
# ටී.බී.ඩී ආර්යසේන මහතාගෙන්
# සුභ පැතුම් පණිවුඩයක්

ත්‍රිකුණාමලය, නගර හා කඩවවත ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය මහින්, දෙවන වරට නිකුත් කරනු ලබන සාහිත්‍ය සංග්‍රහයට පණිවුඩයක් ලිවීමට ලැබීම සතුටට කරුණකි.

අප රටේ සාහිත්‍ය කලා අංග පිළිබඳව නව අබණ්ඩයක් ඇතිවී තිබෙන මෙම යුගයේ ත්‍රිකුණාමලය ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය මේ කරුණ ගැන දක්වන උනන්දුව ඇත්ත වශයෙන්ම අතිශයින් අගය කළ යුත්තකි.

දෙමළ, සිංහල, මුස්ලිම් හා වෙනත් සුළු ජාතීන් ද බහුලව ජීවත්වනු ලබන ත්‍රිකුණාමලය වැනි නගරයක මෙබඳු කටයුත්තක් කිරීම සැබවින්ම අප රජයේ උත්සාහය වන ජාතික සමගියට මහ පාදන්නක් බවද සඳහන් කළ යුතුය.

මෙම ප්‍රකාශනය දියුණුවෙන් දියුණුවට පත්වේවායි ප්‍රාර්ථනා කරමි.

ටී.බී.ඩී. ආර්යසේන,
ප්‍රාදේශීය අධ්‍යාපන අධ්‍යක්ෂ,
ත්‍රිකුණාමලය.

1998-10-30.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை நகராட்சி மன்ற தலைவர்

# திரு. பெ. சூரியமூர்த்தி

### அவர்களின்

# ஆசிச்செய்தி

எமது திருக்கோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலகத்தினரால் வருடாந்தம் நடாத்தப்படும் சாகித்திய விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அளவிலா ஆனந்தம் அடைகிறேன்.

இப்பகுதியின் கலையும், கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் இதன் மூலம் பிரதிபலிக்கச் செய்வதுடன், மாணவர்களது எழுத்தாக்கங்களான கதைகள், கட்டுரைகள் போன்றவற்றுடன் அவர்களுக்கு இயல்பாகவுள்ள ஏனைய திறமைகளையும் இச்சந்தர்ப் பத்தில் வெளிக்கொணர வைத்து பரிசில்கள் வழங்குவதும் போற்றுதற்குரியது.

போராட்ட சூழலிலும், அகதிவாழ்வுக்கு முடிவில்லா நிலையிலும் வாழ்ந்துவரும் எமது பிரதேச மக்கள் புத்துணர்வும், சுகவாழ்வுக்கும் தம்மை ஓரளவுக்கேனும் ஈடு படுத்துவதாயின் இவ்வாறான விழாக்கள் அவசியமானதாகும். இதனை பொழுது போக்காகவோ அல்லது கடமையின் நிமித்தம் நடாத்தப்படும் ஒரு நிகழ்வாகவோ கொள்ளாமல் எமது பிரதேச படைப்புக்களும், திறமைகளும் வெளிக்கொணர ஒரு அரங்காக இதனை வழிநடத்த வேண்டியது பிரதானமான கடமைப்பாடாகும்.

இதனை முன்னின்று நடத்துபவர்கள் அத்தனைபேர்க்கும் எனது நல்லாசி என்றும் உரித்தாவதுடன், பங்கு கொள்ளும் எமது பிரதேசத்தவர்களுக்கு தொடர்ந்தும் நல்ல ஆரோக்கியமும், நற்சிந்தனைகளும் வளர இறைவனைப் பிரார்த்தித்து இவ் விழா சிறப்புற எனது நல்வாழ்த்துக்கள்.

நகராட்சி மன்றம்
திருகோணமலை.

**பெ. சூரியமூர்த்தி**
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணி

# ஜனாப். உ. மு. இஸ்மாயில்

அவர்களின்

# ஆசிச்செய்தி

திருகோணமலை ஓர் அழகான நகரம். அதன் உயர்ந்த மலைகளும், பரந்த நீலக்கடல்களும், திறந்த வெள்ளைநிற மணல் வெளிகளும், அதன் அழகிற்கு மெரு கூட்டுகின்றன. இங்குள்ள எல்லா மத வழிபாட்டு நிலையங்களும் '**ஒன்றே குலம்**'' என்ற உயர்ந்த தத்துவத்தை பிரகடனம் செய்கின்றன.

மனிதாபிமானம் என்னும் சிறந்த விழுமியத்தால் இணைக்கப்பட்ட மூன்று சமூகங்களின் நிலைகளும், அவநம்பிக்கை எனும் சூறாவளியினால் குலைக்கப்பட்டு, "நிம்மதி எங்கே'' என்று எல்லோரும் குரல் எழுப்பும் பரிதாபக் காட்சிக்கு நாம் சாட்சி களாக இருக்கின்றோம்.

இன்றைய அவல நிலையினால், நாம் பெற்ற இரத்தம் தோய்ந்த அனுபவங் கள், அவைகளின் அடிப்படை காரணங்கள், அவைகளின் பரிகாரங்கள்................இவை களை சிந்திக்க, சிந்திக்க, இவைகளுடன் கற்பனா சக்தியும், தமது பங்கை அளிக்க, மனதுக்கு உரமூட்டும் கவிதைகளும், நெஞ்சின் திகில் ஓட்டும் கதைகளும், இலட் சியங்களை பிரதிபலிக்கும் ஓவியங்களும், இளம் சந்ததியின் மனதில் மலர்ந்து பூத்துக் கொழிக்கின்றன.

இவ்விளம் எழுத்தாளர்களையும், கவிஞர்களையும், ஊக்கு விப்பதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதற்காகவும், சமூகங்களிடையே பரஸ்பர நல்லெண்ணத் தையும், ஒற்றுமையையும் தோற்றுவிப்பதற்காகவும், திருகோணமலை பட்டணமும் சூழலுக்குமான பிரதேச செயலகம், திருகோணமலை பிரதேசக் கல்வி அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் நடத்திவருகின்ற பிரதேச சாகித்திய விழாவை, நான் பாராட்டி அவ்விழா சிறப்புற அமைய வேண்டுமென்று ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**ஜனாப். உ. மு. இஸ்மாயில்**
சட்டத்தரணி
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளரும் பிரதேச சாகித்திய விழாக் குழுத் தலைவருமாகிய

# திரு. வ. வேலும்மயிலும்

### அவர்களின்

# ஆசிச்செய்தி

திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் பிரதேச சாகித்திய விழா சிறப்பாக நடந்தேற எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதேச மக்களின் பண்பாடுகள், கலைகள், இலக்கியங்கள் என்பவற்றிற்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் பிரதேச சாகித்திய விழா கொண்டாடப்படுகின்றது.

இரண்டாவது தடவையாக இப் பிரதேசத்தில் இவ்விழா கொண்டாடப்படுகின்றன. இதிலே பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி திறந்த போட்டியாக நடத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. பாரம்பரிய கலையாக்கங்களும் விழாவை அலங்கரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இச்சாகித்திய விழா இனிதே நடந்தேற ஒத்துழைப்பு நல்கிய வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், பிரதேசத்தில் வாழும் பொது நிறுவனங்கள், பொது மக்கள், கலைப்படைப்பாளர்கள், இலக்கியவாதிகள், இவ்விழாவின் வெற்றிக்கு பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும், நானும் என்னுடன் இப்பணியில் சார்ந்த உத்தியோகத்தர்களும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

நன்றி

பட்டணமும் சூழலும், பிரதேச செயலகம்
திருகோணமலை

**வ. வேலும்மயிலும்**
பிரதேச செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

01. திருக்கோணமலை பிரதேச கலை கலாச்சார பண்பாட்டுக் கோலங்கள் (கட்டுரை) - ஞானசிரோன்மணி பண்டிதர். ஆர். வடிவேல் — 01

02. "பொழுதும் புலராதோ " (கவிதை) - திருமதி. நாகராணி சீதரன் — 05

03. சமுதாய முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு (கட்டுரை) - செல்வி. பத்மபிரியா சுப்பையா — 06

04. සාමය, සාමය කඩවීම සහ සාමය සඳහා මිනිසාගේ යුතිකම (රචනා) - එච්. ඒ. ජනක මධුභාෂණ පෙරේරා මෙනවිය — 08

05. அந்த நாலுபேர் (சிறுகதை) - திரு. இ. சி. சுந்தரலிங்கம் (திருமலை சுந்தா) — 14

06. සාමය ස්මස්තයකි ලක් මව්ට අපේ (කවි) - ජී. ර්ශානි කාංචනා අපොන්සු මෙනවිය — 17

07. திருக்கோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசச் செயலாளர் பிரிவு இன்று - திரு. தி. விஸ்வரூபன் — 19

08. சமுதாயம் மலர்ந்திட இணைந்து நாம் உழைப்போம் (கவிதை) - திருமதி. எஸ். சி. சற்குணராஜா — 23

09. போட்டி முடிவுகள் — 25

10. நன்றியுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை பிரதேச கலை கலாசார பண்பாட்டுக் கோலங்கள்

ஞானசிரோன்மணி
பண்டிதர். ஆர். வடிவேல்
(ஆர்வி)

கலை, கலாசாரம், பண்பாடு என்பன ஒரு நாட்டு மக்களிடம் பாரம்பரியமாக அமைவன உதாரணமாக இலங்கையை எடுத்துக் கொண்டால் இன, மதக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆத்மீகப் பாரம்பரியம், கலாசாரப் பாரம்பரியம், பண்பாட்டுப் பாரம்பரியங்கள் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இந்தப் பாரம்பரியங்களின் வளர்ச்சி, தளர்ச்சிகளே, திருக்கோணமலைப் பிரதேசத்திலும் அமைந்திருக்கிறது.

திருக்கோணமலை மாவட்டத்தின் பிரதான பட்டணமாகிய திருக்கோணமலை மூன்று மைல் சுற்றளவுடையது. இப்போது. விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. 1950 ஆம் ஆண்டில் திருக்கோணமலைப் பட்டணத்தில் வாழ்ந்த மக்கள் தொகை 32507. திருக்கோணமலை மாவட்டத்தில் வாழ்ந்த மக்கள் தொகை 75926, தமிழ்மொழி பேசும் தமிழர், முஸ்லிம்களே பெரும்பான்மையினராவர். இதே கால கட்டத்தில் இங்கிருந்த சிங்கள மக்களோ மிகச் சிறிதளவேயாவர்.

திருக்கோணமலைப் பிரதேசத்தில் மூவின மக்களும் இப்போது பரவலாக வாழ்ந்து வந்தாலும், அவரவர்களுக்குரிய கலாசாரமும், பண்பாடும் அவரவரால் பேணப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாய் இருக்கின்றது. பிரதேச மட்டத்தில் பாரம்பரியமாக திருக்கோணமலையில் வாழ்ந்த தமிழ் மக்கள் தனித்துவமான கலாசாரமும் பண்பாடும் உடையவர்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஒரு இன மக்களின் பண்பாடு என்னும் பொழுது அது பல கூறு களைக் கொண்டது என்பது சொல்லாமலே விளங்கும். பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், கொள்கைகள், கோட்பாடுகள், இலட்சியங்கள், சமூகச் சட்டங்கள், அகத்திணை புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியல் விதிமுறைகள், ஆடை அணிகலன்கள், உணவுப் பழக்க வழக்கங்கள், திருவிழாக்கள். களியாட்ட விழாக்கள், கவின்கலை மரபுகள், பிரதேச சுற்றுச் சூழல் விழாக்கள், விவசாயம், கடற்றொழில் பெறுபேறுகளை அனுபவிக்கும் விழாக்கள் ஆகிய எல்லாவற்றையும் இது குறிக்கும்.

நாட்டுப் பாடல்கள், நாடோடி இலக்கியங்கள், பழமொழி, முதுமொழி மற்றும் இசை, நாடகம், நாட்டிய வளர்ச்சி, முதலானவற்றையும் ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, தச்சுத் தொழிற்கலை, நகையலங்காரக்கலை, உலோகத் தொழிற்கலை, ஆகியவற்றையும் இதில் அடக்கலாம்.

இனக்கலப்பாலும், மதமாற்றங்களாலும், பிறநாட்டு நாகரீகங்களாலும் தமிழர் பண்பாடு ஒரு சிறிது மாற்றமடைந்துள்ளது. எனினும் அடிப்படைக் கோட்பாடுகள் ஆட்டங்காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தினால் வாழ்பவன் மனிதன் மனம் நிறைந்த மனிதவாழ்வுக்கு இன்றியமையாதவை மூன்று அவை. உணவு, உடை, உறையுள், என்பன. பண்டைக்காலத்தில் இவைகளுக்குப் பஞ்சமில்லை, இவைகள் நிறைவாயிருக்கும் போதுதான் மக்களுடைய உள்ளத்தில் கலைகள் பிறக்கும். கலைகளின் வடிவாயிருப்பவன் கடவுள். எனவே கடவுள் நம்பிக்கையை அடித்தள மாகக் கொண்ட ஆத்மீகப் பாரம்பரியமும் அப்போதுதான் பிரகாசிக்கும்.

"மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடமை, தானம், தவம், முயற்சி, தரளாண்மை தேனின்கசிவாந்த சொல்வியர்மேல் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" என்றார் ஒளவையார்.

மக்களை உயர்வுதாழ்வற்ற சமபாவத்தில் வாழவைத்த பின்பே அவர்களின் கலை, கலாசாரம், பண்பாடுகளைக் கணித்தல் உகந்ததாகும். இக்காலத்தில் உணவு பற்றாக் குறையும், பஞ்சமும் ஏற்பட்டிருக்கிறது. உற்பத்திக் குறைவும், மக்கள் பெருக்கமும் இதற் குக் காரணம்.

உடைப்பஞ்சமும் ஏற்பட்டிருக்கிறதா? ஆம் தேவைக் கதிகமாக சேமிப்பதால் பொருள் உள்ளவனிடத்திலும், இல்லாதவனிடத்திலும் உடைப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இருப்பது போதாது இன்னும் வேண்டுமென்னும் பேராசையும் ஒருவகைப் பஞ்சமே. உறை யுளுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதா? ஆம் ஒன்றுக்கு இரண்டென்று வீடுகளைக் கட்டியும் போதாதென்ற அதிருப்தியாலும், யுத்தக் கெடுபிடிகளால் கிராமத்து மக்கள் பட்டணத்தை நோக்கிப் படையெடுப்பதாலும் பிராந்திய மட்டத்தில் திருக்கோணமலையில் உறையுளுக்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எனவே உணவு, உடை, உறையுள், மூன்றாலும் பஞ்சத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுடைய உள்ளத்தில் கலைகள் எப்படிப் பிறக்கும். எனினும் நமது முன்னோரின் ஆன்மீகப் பாரம்பரியம், கலாசாரப் பாரம்பரியம், பண்பாட்டுப் பாரம்பரியம் என்பனவற்றின் அடையாளங்களாக பிராந்திய மட்டத்தில் கலை, கலாசாரம், பண்பாட்டுக் கோலங்கள் காணப்படுகின்றன.

"கலை" என்ற சொல் முதலில் வழங்கியபோது, செயல்திறமையைக் காட்டுவதும், அழகு ஏற்படும் வகையில் செய்வதும், சுவைபயக்கவல்லதும், பற்பல காரியங்களுக்கு உதவுவதுமான அறிவையும் ஆற்றலையுமே குறித்தது. ஆகவே கலையில் செயல் பயன், திறமை, அழகு, சுவை, என்ற அம்சங்கள் உள்ளன. நாகரீகம், பண்பாடு என்று சொல்லப் படுவன இக் கலைகளின் வாயிலாகவே ஏற்பட்டன.

சொற்களின் பொருள் காலாகாலத்தில் விரிவதும், சுருங்குவதும், மேம்படுவதும் தாழ்ந்து போவதும் இயல்பு கலை என்ற சொல்லும் ஒருவிதப் பொருட்பெருக்கையும் மற்றும் வேறுபாடுகளையும் அடைந்து திறமையையும் வியக்கத்தக்க முறையிலே செயல்படுவதையும் குறிப்பதாயிற்று எனவே பற்பல துறைகளில் கலைகளின் வகை அறுபத்துநாலு என்று அட்டவணைப் படுத்தப் பட்டிருக்கிறது. அட்சரலட்சணம் முதல் அவஸ்தைப் பிரயோகம் ஈறாகவுள்ள இக்கலைகளை சாஸ்திரங்கள் கூறுகின்றன.

திருக்கோணமலை மாவட்டத்திலே கலைவிழா ஒன்றை நடத்த வேண்டுமென்று தீர்மானித்தால், எல்லோருடைய மனத்திலும் எழும் எண்ணங்கள் இயல், இசை, நாடகம், என்னும் முத்தமிழ் வட்டத்துக்குள் நின்று சுழலும், அறுபத்துநான்கு வகைக் கலைகளையும் இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை, என்னும் மூன்றுடன்அடக்கி விடலாம்.

**இயற்கலைக்குள்** - எண்ணும், எழுத்தும் பிறவும், அடங்கும். இதனை நமக்கு அறிவு றுத்ததும் வகையில் "எண்ணும் எழுத்தும் கண்ணெணப்படும்." என்று ஒளவையாரும்

**'எண்ணெணப் எனை எழுத்தென்ப இவ் விரண்டும்**
**கண்ணெபன் வாழும் உயிர்க்கு'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று திருவள்ளுவரும் கூறினர். எண்ணுக்குள் சோதிடம் மனையடி சாஸ்திரம், மாந்திரீகம், முதலியனவும், அடங்கும்

**இசைக்கலைக்குள்-** கர்நாடக சங்கீதம், பண்ணிசை, நரம்புக்கருவி, தோற்கருவி, துளைக்கருவிகளின் இசை முதலியன அடங்கும்.

**நாடகக் கலைக்குள்-** மேடை நாடகங்கள், பரதநாட்டியம், நாட்டுக்கூத்து வில்லுப்பாட்டு, கதாகாலாட்சேபம், முதலியன அடங்கும்.

இவைகளைத் தவிர சிற்பக்கலை, ஓவியக்கலை, கோலம் போடுதல், மாலைகட்டுதல், கட்டிடக்கலை, பன்னவேலை, மரவேலை முதலான பலவகைக் கலைகளும், மல்யுத்தம், சீனடி சிலம்படி, பந்தம் சுழற்றுதல், கோலாட்டம், பலவகை விளையாட்டுகள், ஆலய வழி பாட்டின் அம்சமாய் அமைந்த கும்பம், கரகம், காவடியாட்டம், துலாக்காவடி, முதலியனவும், கலைகளேயாகும்.

எத்தகைய கலைகளும் கலாசாரமும், மக்களுடைய வாழ்க்கையைப் பண்படுத்துவதாக அமைய வேண்டும். கலை ஆச்சாரம், கலாசாரம், ஆசாரம் என்பது ஒழுக்கம் இந்த ஒழுக்க மே பண்பாடு ஆகும். எனவே கலைகள் மனித வாழ்க்கையைப் பண்படுத்தக் காரணிகளாய் அமைகின்றன. மனம், வாக்கு, காயத்தால் திரிகரண சுத்தியோடு கலைகளைப் பயிலுவோர் சீரியகுணம், சீரிய பேச்சு, சீரிய செயல்திறமுடையவர்களாக பண்படவேண்டுமென்றே முன்னோர் கலைகளை வளர்த்தனர்.

திருக்கோணமலைப் பிராந்தியத்தில் நடைபெறும் கும்பவிழாவை எடுத்துக்கொள்வோம். 19ஆம், நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் பிரித்தானியர் கடற்படைத் தளம் அமைப்பதற்காக இங்கு கொண்டுவரப்பட்ட சீக்கியரால் ஆரம்பிக்கப்பட்ட கும்பவிழா தொடர்ந்து இன்றுவரை திருக்கோணமலைப் பிராந்தியத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்பிரதேசத்திலுள்ள பல கோயில்களில் கும்பம், கரகம், என்பன கட்டி புரட்டாதி மாதம் தசமியன்று இரவு பூராவும் இவ்விழா பிரதேச விழாவாக நடைபெற்று வருகிறது. இப்பிரதேசம் முழுவதும் இந்துக்கள் தம்மனைகள் தோறும் கும்பம் வைத்து வழிபட்டு விழாக் கொண்டாடுகிறார்கள்.

இவ்விழாவுக்குரிய கும்பம் கரகம் கட்டுவது ஒரு தனிக்கலை. தோரணங்கள் மாலைகளால் வீதிகளை அலங்காரம் செய்வதும் ஒருவகைக் கலை, கும்பங்களைத் தாங்கி வருபவர்கள் ஆடும். ஆட்டங்கள் ஆடற்கலை, இதனை நடத்துபவர்கள் உடுக்கடித்துப் பாடுவது பாடற் கலை, ராஜமேளம், மங்களமேளங்கள் வாசிப்பது இசைக்கலை, இவ்வாறு, இப்பிராந்தியத் தில் நடைபெறும் விழாவைப் போல வேறு எங்குமே நிகழ்வதில்லை.

இப்பிராந்தியத்தில் நடைபெறும் மங்கல, அமங்கல விழாக்களும் பாரம்பரியமாய் கருத் துச்செறிவுள்ள கலையம் சங்களுடையனவாகவே நடைபெறுகின்றன.

தமிழ் மக்களின் பண்பாட்டுக் கலாச்சாரங்களில் ஒன்று பூப்பு நீராட் டல், பருவமடைந்த கன்னியின் கையில் வேப்பம்பத்திரம் கொடுத்தல், கற்பு என்னும் திண்மை, கூர்மையாக இருக்க வேண்டும். என்பதை உணர்த்த கையில் சத்தகம் கொடுத்தல், பால் அறுகுவைத்து நீராட்டல் போன்றனவும்,

திருமணம் நடைபெறுமிடத்தில் அரசாணி கட்டி அதைச் சுற்றி கொய்யப்பட்ட சீலை கட்டுதல் பெண்களின் கற்பிற்குப் பெரும் பாதுகாப்பு ஏற்படுத்தப்படுகின்றது. என்பதை விளக்கும் ஆழமான பொருள் பொதிந்த நிகழ்ச்சியாகும். அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல், கால் விரல்களில் மெட்டி அணிதல், அட்சதையால் ஆசீர்வதித்தல், மணப்பந்தலில் வெள்ளை கட்டுதல் யாவும் பொருள் நிறைந்த பண்பாட்டுக் கோலங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு விழாக்களில் ஆண்கள் வேட்டி, சட்டை, சால்வை, தலைப்பாகை, அணிவதும், பெண்கள் சேலை சட்டையோடு தலைக்குப் பூச்சூடுதல், பொட்டுவைத்தல் முதலியன தமிழருடைய பண்பாட்டுக் கோலங்களாகும்.

தற்காலத்தில் பெண்கள் தலைவிரிகோலமாக திருமண வைபவங்களிலும் ஆலய வழிபாடுகளிலும் தமது கூந்தலைப் பறக்க விட்டுக் கொள்ளும் பண்பாடு கண்டிப்பாகத் தவிர்க்கப்படவேண்டும். பார்க்க அழகாயிருக்கலாம். இவைகள் திரைப்படக் கலைகள். காலத்துக்குக் காலம் மாறுபடும் திரைப்படக் கலைகள் அவசியம் தானா? அல்லது பண் பட்ட பண்டைத் தமிழரின் பண்பாடுகளும் கலாச்சாரமும் அவசியமா? என்பதைச் சிந்திக்க வேண்டும். தலைவிரி கோலம் அமங்கலத்தைக் குறிப்பது. கண்ணகி தலைவிரித்தாள் மதுரை எரிந்தது. கூந்தலை ஐந்து வகையாக முடித்துக் கொள்ளும் தலையலங்காரக் கலையைப் பற்றி நூல்கள் கூறுகின்றன.

தந்தை, தாய், குரு, பெரியோர், மூத்தோர். விருந்தினர் போன்றவர்களைக் கனம் பண்ணு வது மக்களின் பாரம்பரியப் பண்பாடு இந்தப்பண்பாடு இந்தப்பிரதேசத்தில் மாத்திரமல்ல தமிழ்மக்களிடையே மிக, மிக., அருகிவிட்டது.

தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளின் பிறந்ததினத்தைக் கொண்டாடுவதும் பண்பாட்டுக் கோலமாகும். ஒரு குழந்தையின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் போது பிள்ளைக்குப் புத்தாடை அணிவித்து, நீண்ட ஆயுளும் நல்வாழ்வும் வேண்டி ஆலயத்தில் வழிபாடுசெய்வதும், வீட்டில் சுற்றம்சூழ மங்கல நிகழ்சிகள் நடத்துவது மரபு, பிறநாட்டு நாகரீகக் கலப்பினால் தமிழ்மக்கள் இக்காலத்தில் கேக் வெட்டுவதையும், கேக்கில் ஏற்றப்படும் மெழுவர்த்தியின் ஒளியை ஊதி அணைப்பதையும் கலாசாரமாக்கிக் கொண்டார்கள். குழந்தையின் மங்கள கரமான நிகழ்ச்சியில் ஒளியை அணைப்பது அமங்கலமல்லவா? இது தவிர்க்கப்பட வேண்டாமா

பிறநாட்டு நாகரீகத்தாலும் பிறமதக் கலாசாரக் கலப்பினாலும் தமிழ்மக்களின் கலாசாரமும் பண்பாடும் புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இத்தகைய பிரதேசக் கலாசாரங்கள் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிராமப்புறங்களுக்கும் பரவிவருகின்றது.

பிரதேசமட்டத்தில் இக் காலத்தில் நடைபெற்றுவரும் இசை நிகழ்ச்சிகள் பரதநாட்டி யங்கள், நாடகங்கள், வில்லுப்பாட்டு இசைப்பிரசங்கங்கள், கும்பிகோலாட்டம், ஊஞ்சற்பாட்டு முதலியனவும் மாலை கட்டுதல், பூக்கோலம் மாக்கோலம் போடுதல், என்பனவும், பல்வேறுபட்ட வீர விளையாட்டுக்கள், ஓவியம் சிற்பம் என்பனவும், ஆலய வழிபாட்டு விழாக்கள் முதலியனவும் தமிழரின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளின் கோலங்களாக நடை பெற்றுவருகின்றன.

> அறிவு மூடத்தனத்தால் மூடப்பட்டிருக்கிறது
> அதனால் ஜீவராசிகள் மயக்கமடைகின்றன.
>
> **(கீதை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சாகித்திய விழா போட்டியில் முதலாம் இடம் பெற்ற **கவிதை**

# பொழுதும் புலராதோ

**திருமதி. நாகராணி சீதரன்**
(ஆசிரியை)

கோலக் குயிலும் சோலைக் கிளியும்
சுதிகூட்டிக் கொடுத்திடவே
யாழின் நரம்பில் மேவும் சுரங்கள்
தமிழ்பேசிக் களித்திடவே
மாலை நிலவில் வீசிடுந் தென்றல்
தமிழ்வாசஞ் சுமந்திடவே
வாலைக் குமரியின் நாணச் சிரிப்பாய்
தமிழ் வாழ்ந்து மகிழ்ந்தாளே

திரைகடலோடி பெரும் புகழ் தேடி
உறவுகள் படைத்தோமே
உரிமைகளோடு உணர்வுகள் சிறக்க பல
தலைமையும் வகித்தோமே
கருமுகில் சூழ்ந்த ஒளி நிலவாக
கவலையில் கலந்தோமே
நெருப்பினில் உருகிய மெழுகது போல
நிலைமாறித் தவித்தோமே.

கலைத்துவம் ஓங்கக் காவியம் போற்ற
சமத்துவங் கண்டோமே
வித்தகம் வளர்த்து விந்தைகள் செய்து
விருதுகள் பெற்றோமே
சத்திரந்தேடி சாவினுக்கோடி யின்று
சலனமுங் கொண்டோமே
நித்தமும் சாகும் நிலைமையும் மாறும்
தத்துவம் புரிந்தோமே.

கொடியில் பூத்த கொத்து மலராய்
சூடிக் கிடந்தோமே
கூத்தும் பாட்டும் சிந்தை நிறைய
யாத்து மகிழ்ந்தோமே
வித்தாய் வளர்ந்த சொத்துகள் யாவும்
வீணாய்ப் போனதுவோ
சித்தங் கலங்கி சிந்தை தளர்ந்தது
நாம்பித்தாய் மாறுவதோ?

பெற்றவர் எங்கோ சுற்றமும் எங்கோ
பற்றது விட்டோமே
வேரதுவோடி விழுதுகள் தாங்கி வளர்த்த
உறவுகள் இழந்தோமே.
சாவிலுங்கூட சேர்ந்திட முடியா உயர்
சரித்திரம் படைத்தோமே
பாவினில் நூலாய் பாவிகள் நாமாய்
நோய்பல கொண்டோமே

சாதிப் பெயரால் வேள்விகள் செய்து
தொடர்கதை படைத்தோமே
மோதும் அலையில் முட்டிய பொருளாய்
வேதனை வளர்த்தோமே
வாளது பற்றிய வஞ்சகன் போன்று
கொலைபல செய்தோமே
பாழது போவது பாவிகள் நாமென
படித்திட மறந்தோமே

விழுமியங் கூறிடும் அழகிய காவியம்
வீடுகதையாக நினைத்தோமே
பழியைச் சுமந்து பாவம் புரிந்து
அழிவை வளர்த்தோமே
நோயைக் காவும் ஈக்களைப் போல
வாயைப் பிளந்தோமே
தாயைப் போன்ற தமிழின் வளம்
பேசிட மறந்தோமே.

கடமையைக் கண்ணாய் கருதிடமறந்து
உடமையைப் பிரிந்தோமே.
அடிமையின் தளையை உரிமையைப் போல
கருதியே களித்தோமே
அறிவினில் ஊறிய திறமைகள் யாவும்
பறிமுதல் போயினவோ
சிறுமதியாலே பெறுமதி குறைந்தே கொடுஞ்
சிறையினில் வாடுவதோ

பெருநிதி தேடி வரும்வழி யோரம்
வழிப்பறி யானதுவோ
பெருமையில் நிலைத்த தமிழின மின்று
இழிநிலை போனதுவோ
தனித்துவம் முழுதுந் தவிடாய் போனபின்
தமிழர் நாமாமோ
இனித்துயர் யாவும் இதுவே யென்றால்
ஏன்தான் வாழுவதோ.

இமயந் தொட்ட தமிழின் புகழினி
இறந்து பட்டிடுமோ
பனையின் குலையாய் விழுந்து தெறித்த
உறவும் இணைந்திடுமோ
தாயின் விலங்கைத் தகர்த்து விலக்க
தனயன் பிறப்பானோ
தமிழர் நாமெனத் தட்டி யுரைத்திடப்
பொழுதும் புலராதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சாகித்திய விழா போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

# சமுதாய முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு

செல்வி. பத்மப்பிரியா சுப்பையா
தி/விபுலானந்த மகா. வித்தியாலயம்
திருகோணமலை.

இளமை! அது இரும்பல்ல உருக்குவதற்கு, கரும்பல்ல பிழிவதற்கு, கண்ணாடியல்ல நொருக்குவதற்கு மாறாக மனித இலட்சிய வாழ்வின் ஆணித்தர நிலை. மனிதன் என்றால் இலட்சியம் உடையவன். தன் இலட்சியத்தை செவ்வனே நிறைவேற்ற மனோபலத்தை, உடற்பலத்தை அவனுக்கு கற்றுக்கொடுப்பது அவனது இளமை பருவமே. இளைஞர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பு சமுதாயத்தின் முன்னேற்றத்தின் ஆணிவேர் சமுதாயத்தின் இளைஞர்களே. இளைஞர்கள் நினைத்தால் உலகை புதுப்படைப்பாக ஆக்கவும் முடியும், அதை அழிக்கவும் முடியும். இவ்வாறு பலம் பொருந்தியவர்களே சமுதாயததின் முன்னேற்றப்பாதையில் ஒளியாக விளங்கும் இளைஞர்கள். வாழ்வு ஒரு பயணம் குழந்தைப்பருவத்தைக் கடந்து, குமரப் பருவத்தையும் தாண்டியே இளமைப்பருவத்தில் காலடி வைக்கின்றனர் காலடி வைக்கும் இளைஞர்களே சமுதாயத்தை ஊடுருவிப் பார்க்கக் கூடியவர்கள். சமுதாயத்தின் நிலை அவன் கண்களுக்கு வெட்ட வெளிச்சமாகின்றது, சமுதாயத்தை நோக்கும் விதம் புதிய கண்ணோட்டமாகின்றது, நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தையும் அப்படியே ஏற்றுகொள்ளாதவர்களாகின்றனர், எல்லாவற்றிற்கும் ஆம் என்று சொல்வதில்லை, ஏன்? எதற்கு, எப்படி என்ற கேள்விகளை கேட்பவர்களாகின்றனர்.

சமுதாயத்தின் வளர்ச்சியை, ஏற்படும் தாக்கங்களை, அதனால் எழுகின்ற வினாக்களை சிந்திக்கத் தொடங்கி விட்டவர்களே இளைஞர்கள் என்று கூறலாம். இவ்வாறு சிந்திக்கத் தொடங்கியவர்கள் செயல்படாவிட்டால் சமுதாயம் உறங்கிவிடும். "ஓடிக்கொண்டிருந்தால் தான் நதி, உலாவிக் கொண்டிருந்தால்தான் காற்று, சுடும் வரைக்கும் தான் நெருப்பு அவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருப்பவனே இளைஞன் சமுதாயத்தின் முன்னேற்றம் இளைஞர்களின் வாழ்வில் பங்கு கொண்டுள்ளது என்று எடுத்தியம்பலாம் வளர்ச்சி ஒரு அன்றாட நிகழ்வு இளைஞர்கள் எப்போதும் வளர்ச்சியடைந்து கொண்டிருப்பவர்கள் இதனால் இளைஞர்களின் வளர்ச்சியில் சமுதாயம் பல வெற்றிப்படிகளை அடைகின்றது. நாம் உயிர்வாழ உணவு அவசியம் போல் சமுதாயம் வளர்வதற்கு, முன்னேற்றம் அடைவதற்கு, மனோபலமும், அறிவுத்திறனும் கொண்ட இளைஞர்கள் தேவை.

சமுதாயத்தை எடுத்து நோக்குவோமாயின் குழந்தைப்பருவத்தை உடையோர் வாழ்கின்றனர், சிறுவர்கள் வாழ்கின்றனர், இளைஞர்கள் வாழ்கின்றனர், முதியோர்கள் வாழ்கின்றனர். இவர்களில் இளைஞர்களை தவிர குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள் தங்கி வாழ்பவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் ஆற்றல்களும் திறமைகளும் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தின் முதுகெலும்பாக வாழ்பவர்கள் இந்த இளைஞர்கள் எனவே இளைஞர்கள் உறுதியாக நிலைத்தால் சமுதாயம் நிலைக்கும். இளைஞர்கள் சரிந்தால் சமுதாயம் முறிந்துவிடும். சமுதாயத்தின் மத்தியில் எழுகின்ற முறைகேடுகள், அநீதிகள், கொடுமை கள் என்பனவற்றில் விழித்தெழுந்து அமைதியை நிலைநாட்டும் வல்லமை இளைஞர் களிடையே உள்ளது. முதியோரால் வழிகாட்டமுடியும் இளைஞர்களால் செயற்படுத்த முடியும். நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை இன்றைய இளைஞர்களே என்று கூறினால் மிகையாகாது. சமுதாயமானது இளைஞர்களின் துணிவால் செயல்பாட்டால் நாளுக்கு நாள் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டே உள்ளது. சமுதாயத்தில் முறிந்து போகின்ற உறவுகளை, ஏற்படுகிற பிளவுகளை சீர்படுத்தி ஒற்றுமையில் வாழச் செய்கின்றார்கள். தங்கள் விடா முயற்சியினால் கல்வித்துறையை வளர்க்கின்றார்கள். விளையாட்டுத் துறைகளிலும் சாதனைப்படைப்பவர்கள் இளைஞர்களே. இந்த இளைஞர்கள் வளர்ச்சி யடைந்து முன்னேறும் போது அவர்கள் உறவு கொண்டு வாழும் சமுதாயமும் முன்னேற்ற மடைகின்றது.

எந்தவொரு சமுதாயத்தை எடுத்துக் கொண்டாலும் அநீதிகளை, அக்கிரமங்களை எதிர்த்து போராடக் கூடியவர்கள் இளைஞர்களே போராட வேண்டியவர்களும் அவர்களே. பிளவுகளை அகற்றி உறவு பாலங்களை அமைகின்றனர். சாதி வேற்றுமைகளை, சமயப் பூசல்களை தமது ஒற்றுமையான வாழ்வால் களைந்து அன்பின் சமுதாயமாக சமுகத்தை கட்டியெழப்பி முன்னேற்றிடும் பொறுப்பு இளைஞர்களின் பணியிலேயே முழுதும் தங்கியுள்ளது. இளைஞர்களின் பங்கு, அவர்களின் பணி ஒரு சமுதாயத்தில் எந்த அளவுக்கு காணப் படுகின்றதோ அந்த அளவிற்கு சமுதாயத்தின் முன்னேற்றம் காணப்படும். இளைஞர்களின் பணி புதைக்கப்பட வேண்டிய தொன்றல்ல மாறாக வரவேற்போடு விதைக்கப்பட வேண்டிய தொன்றாகும். இளைஞர்களை அடக்கிவைப்பது பூமியை சங்கிலியால் கட்டி சூழற்சியை நிறுத்த முயல்வது போன்ற செயலாகும்.

இன்றைய உலகத்தில் போதைப்பொருள் மோகத்தால் எயிட்ஸ் நோயின் வேகத்தால், அநீதியான அரசியலமைப்பால், இளைஞர்கள் இடர்பட்டு கல்லறைகளில் சில்லறைகளாக சிதறப்பட்டு வருகின்றார்கள். ஆக்கத்திற்குரியவர்கள் ஒருபக்கம் அழிந்து கொண்டு போக இவற்றால் ஏற்படும் அழிவுகளை உறுதியான மனதோடு எதிர்த்து போராடுகிறவர்களும் அதே இளைஞர்களே. உலகம் இன்றும் வாழ்கின்றதென்றால் அது இளைஞர்களின் நிறை வான பங்களிப்பினால் என்றே கூறலாம். இளமை, வீரமுள்ளது, அறிவுள்ளது, கவர்ச்சியுள்ளது இலட்சியமுடையது, அர்ப்பணமுள்ளது என்று கூறுகின்றோம். இவ்வாறான ஆற்றல்களை, கொண்ட இளைஞர்களால் தான் சமுதாயமும் அழகுள்ளதொன்றாகின்றது. இலட்சிய முடையதொன்றாகின்றது. இளைஞர்கள் எவருக்கும் அசைந்து கொடுப்பவர்களல்ல பயந்து உருகி விடக்கூடியவர்களல்ல, அநீதிகளை, கண்டு துவண்டு விடுபவர்களல்ல மாறாக எதிர்த்து போராடக் கூடியவர்கள். ஆணிவேரைப் போன்றவர்கள். சமுதாயம் என்னும் விருட் சத்தினை வளர்த்து நற்கனி வழங்கக் கூடியவர்கள். வாழ்வின் தடைகளை படிக்கற்களாக்கி ஏறிச்செல்லக்கூடியவர்கள். எனவே இளைஞர்கள் சமுதாயத்தின் தூண்கள் நாளைய சமுதாயத்திற்கு இன்று அத்திவாரங்கள். இளமையின் கம்பீரம் இன்றைய இளைஞர்களின் புரட்சியில் தெரிகின்றது. இளமை ஒரு சாதனைக் கிரிடமாக மாறி இளைஞர்களின் மகத்துவத்தை தெளிவுப்படுத்துகின்றது. இளமையின் அர்த்தம் சமுதாயத்தின்முன்னேற்றத்தில் தெரியும். இளமையின் அனுபவம் முதுமையில் செல்வமாகும். இளமையின் மகத்துவம் அதனை கடந்தவர்களுக்கே துலங்கும். இவ்வாறாக சமுதாய முன்னேற்றத்தில் இளைஞர் களின் பங்கை அறிகின்றோம். சமுதாயமானது இளைஞர்களை கெட்டியாக பிடித்துகொள்ள வேண்டும். இளைஞர்களை தாலாட்டி வளர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සාමය, සාමය කඩවීම සහ සාමය සඳහා මිනිසාගේ යුතුකම

ප්‍රාදේශීය සාහිත්‍යය උළෙළ - 1998
නම :- එච්.ඒ.ජනක මධුභාෂණ පෙරේරා මෙනවිය
වසර :- 13 වසර (කලා)

"සාමය" යනු:- මෙලොව ඇති සොඳුරුතම, උත්තරීතරම වචනය යැයි මට හැඟේ. එය ඒ තරමටම පරම පිවිතුරුය. ආනන්දනීය වේ. සාමය ඇති තැන මිනිසාට සුවසේ, නිදහසේ තම අයිතිවාසිකම් භුක්ති විඳිය හැකි පරිසරයක් නිර්මාණය වේ. ඒ පරිසරය තුල මානව අයිතීන් වැදගත්කමක් අත්කර ගන්නා අතර,සියළුම පුරවැසියන්ට එකම තත්වයෙහි ලා සැළකේ. එවන් සමාජයක ජාති, ආගම්, කුළ, ආර්ථික හා සමාජික මෙන්ම දේශපාලන ආදි නානාවිධ භේදයන් නොසැළකේ. ඒ නිසා "සාමය" ලොව ඇති සොඳුරුතම වචනය යැයි පැවසීම අතිශයෝක්තියක් නොවේ.

"රාජ්‍යය" නම් සංවිධානයේ සම්භවය පිළිබඳව විවිධ මති මතාන්තර පවතී. ඒ අතුරින් එකක් වනුයේ, බිඳ වැටී ගිය ස්වභාවික සාමය ආරක්ෂා කර ගැනීමට මිනිසුන් විසින් එකතුව රාජ්‍යය බිහි කරගත් බවය. මිනිසා මිනිසා එකතුව පවුලත්, පවුල් එකතුව ගෝත්‍රයක්, ගෝත්‍ර-ගෝත්‍ර එකතුව සමාජයක් බිහිවිය. ආර්ථික, සාමාජිය දේශපාලනික, හා සංස්කෘතිකමය හේතු අරභයා මේ ගෝත්‍ර අතර ගැටුම් ඇතිවු අතර, එතෙක් සමාජයේ පැවැති ස්වභාවික සාමය බිඳ වැටුණි. මේ නිසා ජනතාවගේ පොදු සම්මුතියෙන්ම රාජ්‍යය නැමති සංවිධානය ගොඩ නගා, අහිමිව ගිය සාමය යළි ස්ථාපනය කරන ලදි. මේ අනුව "සාමය" යනු:- කෙතරම් වැදගත් සංකල්පයක් දැයි ඔබට වැටහෙනු ඇත.

ඒ එසේ වුවද මිනිසා විවිධ සාධක ඔස්සේ විකාශනය හා පරිණාමය වී දියුණු වීමත් සමඟම,එකකු පරයා එකකු නැගිසිටීමේ ආත්මාර්ථාකාමී සිතුවිල්ල කරළියට පැමිණුනේය. එක් අයකු යටපත් කර තමන් නැගී සිටීමට දැරූ උත්සාහයේදි, බලලෝභිත්වය වර්ධනය විය. සැකය, කුහකබව, අධම බව හා වෛරය යනාදි සිතුවිලි එතැන් පටන් ක්‍රියාත්මක වු අතර, සෑම විටම එකිනෙකා කෙරෙහි බියෙන් හා සැකයෙන් බැලීමට මිනිසා පුරුදු විය. මේ සියලුම ක්‍රියාදාමයන්ගේ අවසාන පොදු ඵලය වුයේ, එතෙක් ලෝ පුරා ක්‍රියාත්මකව පැවැති, සාමය නම් උත්තරීතර සංකල්පය බිඳ වැටීමය. ලෝක සාමයට තර්ජනය වු අවස්ථා අතර I හා II වන ලෝක සංග්‍රාම, වියට්නාමය යුද්ධය, ගල්ෆ් යුද්ධය ප්‍රබල නිදසුන් කිපයක් පමණකි. බ්‍රිතාන්‍යය, සිපාඤ්ඤය, ඕලන්දය, ප්‍රංශය ආදි රටවල් අතීතයේදි අනුගමනය කළ යටත් විජිතවාදි ප්‍රතිපත්තියද, වර්තමානයේදි ඇමරිකාව අනුගමනය කරන නව යටත් විජිතවාදි ප්‍රතිපත්තිය මෙන්ම හිට්ලර්ගේ පැසිස්ට්වාදයද, මුසෝලිනිගේ ව්‍යාප්තිවාදයද, ලෝක සාමයට වරින් වර ඇති කරන ලද,ඇති කරන බලපෑම සුළුපටු එකක් නොවේ.

ලෝක සාමය බිඳ වැටීමට ප්‍රබල ලෙසට බලපා ඇත්තේ, බලලෝභිත්වයයි. මිනිසා අසීමිත ආශාවන්ගෙන් පෙළීමේ හේතුව නිසා තවකකු අභිභවනය කිරීමේ අභිලාසය ඉතා අගය කොට සළකයි. මේ නිසා තම උරුමයෙන් පමණක් සෑහීමට පත් නොවී, අනෙකාගේ උරුමයන්ද කඩා වඩා ගැනුමට මාන බලයි. වර්තමානයේ ලෝක පොලිස්කාරයාගේ චරිතයට පණ පොවන ඇමරිකාව අනුගමනය කරන්නේ මෙබඳු ක්‍රියා පිළිවෙතකි. ප්‍රබල සමාජවාදි සෝවියට් සංගමය තිබියදි ලෝකයේ බල තුලනයක් ක්‍රියාත්මක වු අතර, ඒ නිසාම ලෝක සාමය මැනවින් ආරක්ෂා වුණි. ඒ රටවල් දෙක අතර පැවතුණේ ශීතල යුද්ධයකි. එහෙත් 1990 දි සෝවියට් සංගමයේ ඇඳ වැටීමත් සමඟම අද ඇමරිකාව නිතරඟයෙන්ම ලෝකයේ මහා කෙරුමා වී සිටින අතර, මේ නිසා අවශේෂ රටවලට සිදු වී ඇත්තේ ඇමරිකානු ගැත්තන් වීමටය. මේ නිසා ලෝක සාමයට

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එල්ල වී ඇත්තේ සුළුපටු තර්ජනයක් නොවේ. තවද මෑත කාලයේ පාකිස්ථානය හා ඉන්දියාව ආදී රටවල් විසින් සිදු කෙරුණු න්‍යෂ්ටික අත්හදා බැලීම්ද ලෝක සාමයට ප්‍රබල තර්ජණයක් බව නොකියාම බැරිය.

මේ අනුව "සාමය" යන්න, ඇතිවන, යළි නැතිවන, යළිදු ඇතිවන නොසිඳෙන රූ පතරක් වැන්න. ලෝක සාමයේ තත්වය මෙන්ම ශ්‍රී ලංකාවේ සාමය පිළිබඳවද සළකා බැලීම කාලෝචිතය. විශේෂයෙන්ම උතුරු - නැගෙනහිර විශාල අර්බුදයක් පවතින මේ මොහොතේ, එය ආරම්භ වු අවස්ථාවේ පටන් වර්තමානය තෙක් වර්ධනය වු ආකාරය පිළිබඳව සළකා නොබැලුවහොත් එය දැඩි සේ යුතුකම් පැහැර හැරීමක් වනු නියතය.

ශ්‍රී ලංකාව කුඩා රටක් වුවද, වසර දහස් ගණනක, ඉතා දිගු සාඩම්බර පෞඪ ඉතිහාසයක් ඇති රටකි. ඒකීය රටක් වශයෙන් ,ඒකීය පාලන ක්‍රමයක් යටතේ, අපගේ මුතුන් මිත්තන්, ඉතා සුවසේ, රිසි සේ සාමය භුක්ති විඳින ලදී. ඉන්දියානු උප මහාද්විපයට ඉතා ආසන්නයේම පිහිටා තිබීම නිසා, වරින් වර මෙරටට දකුණු ඉන්දිය බල පෑම් එල්ල විය. චෝළ පාණ්ඩව හා සොළී ආක්‍රමණය ඒ අතර විය. කාලිංග මාඝ, එලාර, සේන, ගුත්තික අස් වෙළඳුන්, තිය බමුණා මෙන්ම යාපනයේ රජකළ අර්ය චක්‍ර වර්තින්ද එම දකුණු ඉන්දිය සේනාවන්ට නායකත්වය සැපයුවන් වුහ. කෙසේ වුවද ඒ ආක්‍රමණ පළවා හැර යළිඳු සිරිලක එක්සේසත් කර, අහිමි වී ගිය සාමය ස්ථාපනය කිරීමට, දුටුගැමුණු, I විජයබා, මහා පැරකුම්බා, හා වළගම්බා යන රජවරුන්ට හැකි විය. ඉන්දිය සාගරයේ පිහිටා තිබීමත්, කුළුබඩු වලට ඇත් දළ, මුතු මැණික් ආදියට ප්‍රසිද්ධව තිබීමත් නිසා අතීතයේ පටන්ම ශ්‍රී ලංකාව පෙරදිග වෙළඳ මධ්‍යස්ථානයක් බවට පත්වී තිබුණි. එක් අතකින් දෙමළ ජනතාව මෙරට පදිංචි වෙද්දී, අනෙක් අතින් වෙළදාම් සඳහා පැමිණි අරාබි, ජා, මුස්ලිම් වෙළඳුන්ද මෙරට පදිංචි වෙන ලදී. ඔවුහු ශ්‍රී ලාංකික කාන්තාවන් විවාහ කරගත් අතර, ශ්‍රී ලංකාව නිත්‍ය වාසස්ථානය කර ගත්හ. මේ ආකාරයට බහු ජාතික, බහු ආගමික රටක් වශයෙන් මෙරට ක්‍රමිකව විකාශනය වෙද්දී, රාජ්‍යානුග්‍රහයද ඒ සෑම ජාතියකටම, ආගමකටම එක සමානව ලැබුණි. මේ නිසා විවිධ සංස්කෘතීන්ද බිහි විය.

නමුත් 1505 ඇතිවු පෘතුග්‍රීසින්ගේ සංක්‍රමණයත් සමඟ මේ තත්වය වෙනස් වන්නට විය. අනතුරුව ලන්දේසීන්ද, 1796 ඉංග්‍රීසින්ද මෙරට වෙරළබඩ කලාපය අත් පත් කරගත් අතර, 1815 දී ඉංග්‍රීසින් සමස්ත ලංකා රාජධානියම තමන් යටතට ගත්හ. තමන්ගේ මව්බිම වු බ්‍රිතාන්‍යය වැටී සිටි දැඩි ආර්ථික අවපාතයෙන් මුදා ගැනීම සඳහාත්, තමනට අවශ්‍ය බෝග වර්ග නිපදවීම සඳහාත් මෙරට අමු ද්‍රව්‍ය බිමක් කිරීමේ යටි අරමුණක් ඉංග්‍රීසින්ට විය. එතෙක් මෙරට ක්‍රියාත්මක වු ස්වයංපෝෂි කෘෂි කාර්මික ආර්ථිකය සුණු විසුණු කොට දමා, තේ, රබර් ආදී අපනයන බෝග වගාව ප්‍රචලිත කළේ එහෙයිනි. 1833 ඇති කළ කෝල්බෲක් ප්‍රතිසංස්කරණ මෙරට වත්මන් උතුරු-නැගෙනහිර ප්‍රශ්නයේ මූල බීජයදැයි පුශ්නයක් ඇතිවන ආකාරයටම එහි යටි අරමුණු ඉතාමත් දුෂ්ඨ වේ. එක් අතකින් රාජකාරි ක්‍රමය හා ගම්සභා ක්‍රමය අහෝසි කරන ලදී. අනෙක් අතින් ජනතාව වගා කළ ඉඩම් රජයට පවරා ගන්නා ලදී. තවත් අතකින් ඉංග්‍රීසි අධ්‍යාපනය දියුණු කිරීමට කටයුතු යොදන ලදී. ලාංකිකයන් ඉංග්‍රීසින්ගේ වතුවල වැඩ කිරීම ප්‍රතික්ෂේප කළ බැවින්, ඉන්දිය වතු කම්කරුවන් මෙරටට ගෙන්වා පදිංචි කරවන ලදී. ඉංග්‍රීසි අධ්‍යාපනය මෙරට ඇති කළේ, ඔවුන්ගේ පරිපාලන කටයුතු සඳහා, ඉතා අඩු මුදලකට දේශිය ශ්‍රමය ලබා ගන්නා අටියෙන් මිස අපට ඇති ආදරයට නොවේ. ඉංග්‍රීසි ආධිපත්‍යය පැතිරුණු ත්‍රිකුණාමලය, මන්නාරම, මඩකලපුව, යාපනය, ගාල්ල, කොළඹ ආදී ප්‍රදේශවල මිෂනාරි පාසල් ආරම්භ වු අතර, ඒවායේ වැඩි

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වශයෙන් ඉගෙනුම ලැබුවේ ද්‍රවිඩ ජනතාව විසිනි. මේ නිසා සිංහල ජනතාව අභිබවා ද්‍රවිඩ ජනතාව රජයේ ඉහළ තනතුරු වලට යොමු වෙන ලදි.

අනතුරුව ලාංකිකයින් තමනට වගකීම් සහිත පාලන ක්‍රම ඉල්ලා උද්ඝෝෂණය කරන ලදි. 1912 ක්‍රෑ මැකලන්, 1920 - I වැනිය, 1924 - II වැනිය, 1931 - ඩොනමෝර්, 1947 - සෝල්බරි යනාදි ලෙස හඳුන්වා දුන් සෑම ආණ්ඩු ක්‍රමයක් තුළම සැඟව පැවති -යේ ජාතිවාදයේ රුදුරු ගිනි පුපුරුය.

ලාංකිකයින්ට ජාතිවාදයක් අවශ්‍ය නොවූ අතර, ඉංග්‍රීසි අධිරාජ්‍යවාදීන්ට එය අත්‍යවශ්‍යම කරුණක් විය. එ් නිසා ඔවුහු කළේ අමුතුම සංකල්ප රූප මගින් ජාතිවාදය පිළිබඳව බීජ පැතිරවීමය. මෙතෙක් ලංකාවේ භාවිතා නොවූ, මහා ජාතිය හා සුළු ජාතිය නැමති සංකල්පය ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවන්ට ඇතුලත් කොට, එය පුනරෝක්තිය හා පුනරුච්චාරණය තුළින් අමුතුම බෙදීමක් ඇති කරන ලදි.

කෙසේ වුවද ඉංග්‍රීසි අධිරාජ්‍යවාදයෙන් නිදහස දිනා ගැනීමේ ව්‍යාහරයේදී ජනතාව ජාති භේදයෙන් තොරව කටයුතු කළ බව පෙනේ. ඩී. එස්. සේනානායක, අරුණාචලම්, රාමනාදන්, සිද්ධිලෙබ්බේ, ආදි විවිධ ජාතීන්ට අයත් ජන නායකයින් කටයුතු කළේ පොදු ජාතිකවාදී අරමුණක් ඇතිවය. අවසානයේදී ඔවුන්ගේ උත්සාහය සාර්ථක වූ අතර, 1948 දී අපට ඩොමිනියන් තත්ත්වයේ නිදහස ලැබුණි. 1947 දී හඳුන්වා දුන් සෝල්බරි ප්‍රතිසංස්කරණත් සමඟ අපට වෙස්ට් මිනිස්ටර් ආණ්ඩු ක්‍රමයක් ලැබුණි. කෙසේ වුවද ඉංග්‍රීසින් ඉතිරි කර ගිය ජාතිවාදයේ ගිනි පුපුරු, බලලෝභීත්වය නම් සැඩ සුළඟින් ඉහළට මතු වන්නට විය.

මෙතෙක් ප්‍රධාන පක්ෂ වටා ඒකරාශීව සිටි ද්‍රවිඩ හා මුස්ලිම් ජනතාව, අනතුරුව වෙන වෙනම දේශපාලන පක්ෂ පිහිටුවන්නට විය. විශේෂයෙන්ම 1948 ගෙන ආ පුරවැසි පනතට එය ද්‍රවිඩ ජනතාවගේ අයිතිවාසිකම් අමු අමුවේ උල්ලංඝණය කිරීමක් ලෙස චෝදනා එල්ල විය. 1949 දී පෙඩරල් පක්ෂය පිහිට වූ ද්‍රවිඩ ජනතාව සන්ධීය ආණ්ඩු ක්‍රමයක් ඇති කරන ලෙස ඉල්ලා සිටියේය. ඇත්ත වශයෙන්ම, ශ්‍රී ලංකාව වැනි කුඩා රටකට සන්ධීය ක්‍රමයක් හෙවත් පෙඩරල් ක්‍රමයක් අවශ්‍ය නොවන බව මගේ පෞද්ගලික හැඟීමයි. බෙදීමේ හිඳැස ක්‍රමයෙන් විශාල වන්නට විය. අකමැත්තෙන් වුවද පිළි ගැනීමට සිදුවන සත්‍යයක් නම්, ප්‍රධාන සිංහල දේශපාලන පක්ෂ විසින් දෙමළ ජනතා වගේ ඉල්ලීම් නොසළකා හැරි බවය. ඔවුන්ව ඉතා නිර්දය ලෙස රැවටූ බවය. වෙනත් විදියකට කිවහොත්, එදා සිට මේ දක්වාම එ. ජ . ප. ය හා ශ්‍රී. ලං. නි. ප. ය යන ප්‍රබල පක්ෂ දෙක සිදු කළේ, සිදු කරන්නේ, ආණ්ඩු බලය ලබා ගැනීමේදී ද්‍රවිඩ පක්ෂ සහාය කර ගැනීමත්, බලය ලබාගත් පසු ඔවුන් නොසළකා හැරීමත්ය. ඔවුන්ගේ ඉල්ලීම් වලට මීට වඩා අවධානය යොමු කළේ නම්, මේ ප්‍රශ්නය මෙතරම් ඔඩු දිවූ තුවාලයක් නො-වීමට හොඳටම ඉඩ තිබුණි. දෙමළ දේශපාලන නායකයින්ද බොහෝ විට කළේ ඉතා අසාධාරණ ඉල්ලීම් ඉල්ලීමය. 50 ට 50 නියෝජනය ඒ අතුරින් එකකි. මේ සෑම දේය කින්ම සිදු වුයේ, දේශපාලනය පිළිබඳව පෘථුල දැනුමක් නොමැති වූ, බහුතරයක් වූ සාමාන්‍ය පොදු ජනතාව එකිනෙකා කෙරෙහි භේදභින්න වීමය.

වත්මන් අර්බුදය කරා තල්ලු වීමේදී, සිදු වූ වැදගත් සිද්ධීන් මතක් කරදීම මගේ යුතුකමයි. 1956 දී ගෙන ආ රාජ්‍ය භාෂාව සිංහල භාෂාව කිරීමේ පනතට ද්‍රවිඩ ජනතාව දැඩිසේ විරුද්ධ විය. 1958 අංක 28 දරණ පනත යටතේ, දෙමළ භාෂාවටද සමතැන ලබාදීම මගින් එදා සිදු වූ වැරැද්ද සාධාරණීකරණය කරන ලදි. දෙමළ සිංහල පිළිබඳ අර්බුදයක් පිළිබඳව ජායා මාත්‍රයක් මතු වෙද්දී රට පිළියම් වශයෙන්

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"රට සභා ක්‍රමය" යෝජනා කරන ලදි. බණ්ඩාරනායකා - චෙල්වනායගම් ගිවිසුම අත්සන් තැබීමට කටයුතු සූදානම් විය. එහෙත් විරුද්ධ පක්ෂය වූ එ. ජා. පය මීට ප්‍රබල ලෙස විරුද්ධ වීම නිසා එය සාර්ථක කරගත නොහැකි විය. අනතුරුව ඩඩ්ලි - චෙල්වනායගම් ගිවිසුම මඟින් "දිස්ත්‍රික් සභා ක්‍රමය" යෝජනා කළද, එවිට විපක්ෂය වූ ශ්‍රී. ල. නි. පය එයට විරුද්ධ වීම නිසා එය අත්සන් නොකරන ලදි. මේ පිළිබඳව ප්‍රබලව අවසානය යොමු කිරීමේදී, එදා ශ්‍රී ලංකාවේ ප්‍රබලතම පක්ෂ දෙක කටයුතු කළ අන්තනෝමතික බව පිළිබඳව චෝදනාවෙන්, ඔවුනට කිසිදු ගැළවීමක් නොලැබේ. අනතුරුව ගොවි ජනපද ඇතිකර ඒවායේ ජනතාව පදිංචි කිරීමේදී විවිධ ගැටළු ඇතිවිය. සිංහල ප්‍රදේශවල දෙමළ ජනතාව පදිංචි කිරීමේදී ගැටළු මතු නොවුණි. එහෙත් දෙමළ ප්‍රදේශවල සිංහල ජනතාව පදිංචි කිරීමේදී ද්‍රවිඩ ජනතාව, එයට විරුද්ධ විය. " පාරම්පරික නිජබිම් සංකල්පය" ඔවුන්ගේ හිස් මතුපිට බලෙන්ම පැටවීම රට හේතුව විය. එදා පටු දේශපාලන වාසි තකා මෙය යටපත් කිරීමට කටයුතු නොකළේනම් අද ජාතික සමගිය තහවුරු කෙරෙන ප්‍රබලතම සාධකයක් වීමට "ගොවි ජනපද සංකල්පය" හොඳටම ඉඩ තිබුණි. එහෙත් ඉතිහාසය හැසිරුණේ ඉතාමත් අකාරුණික ආකාරයටය.

අනතුරුව 1972 ආණ්ඩු ක්‍රම ව්‍යවස්ථා සංශෝධනයේදී, සුළු ජාතිකයින්ගේ අයිතිවාසිකම් වෙනුවෙන් යොදා ඇති විධි විධාන අහෝසි කරන ලදි. 29 - II වගන්තිය මඟින් තහවුරු කර තිබුණේ, සියළු ජනතාවගේ අයිතීන් නොව, සුළු තරය වූ සුළු ජාතීන්ගේ අයිතීන් පමණි. එහෙත් 1972 දී මූලික අයිතිවාසිකම් ප්‍රඥප්තියක් ඇතුලත් කළ අතර,එය සෑම ජාතියකටම සාධාරණ විය. එහෙත් එය හරිහැටි වටහා නොගෙන කටයුතු කිරීම ඉතා ඛේදණිය විය. මෙහි ප්‍රතිඵලයක් ලෙස "ද්‍රවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණ" පිහිටුවා ගන්නා ලදි. මෙහි මූලික අපේක්ෂාව වූයේ වෙනම රාජ්‍යයක් ගොඩ නගා ගැනීමයි 1977 මහා මැතිවරණයෙන් උතුර - නැගෙනහිර විශාල බලයක් හිමි කරගත් ද්‍රවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණ විපක්ෂය බවට පත්විය. ආණ්ඩු ක්‍රම ව්‍යවස්ථාවේ 06 වන වගන්තිය මඟින් ගෙන ආ "රජයේ සියළුම නිළධාරීන් හා මන්ත්‍රීවරුන්, ඒකීය රාජ්‍යයක් වෙනුවෙන් ක්‍රියා කරන බවට" දිය යුතු දිවුරුම මොවුන් ප්‍රතික්ෂේප කරන ලදි. ඒ නිසා ඔවුනට එතෙක් දැරූ පාර්ලිමේන්තු මන්ත්‍රීධුර අහිමි විය.

මේ සියළු කරුණු වලින් පසුව උදා වූයේ ඉතා අහිතකර ප්‍රතිඵල වලින් සමන් විත කාලයකි. මෙතෙක් ප්‍රජාතන්ත්‍රවාදි රාමුව තුළ සිට තම අයිතීන් දිනා ගැනීමට කටයුතු කළ ද්‍රවිඩ ජනතාව, එතැන් පටන් සංවිධානාත්මකව, අවි ආයුධ මාර්ගයෙන් ස්වකිය අරමුණ ඉටු කර ගැනීමට උත්සාහ දරණ ලදි. මේ සංසිද්ධිය කෙරෙහි අවධා -නය යොමු කළ විට, ඉතා අකැමැත්තෙන් වුවද කිව යුතු වන්නේ. වැඩිහිටි පරම්පරාව විසින් තරුණ පරපුර ආයුධ සංස්කෘතියක් කරා ඇද දැමූ බවයි. අවසානයේදී එල්.ටී ටී.ඊ. සංවිධානය නම් නයි පැටවාට කිරි පෙවූ අමිරතලිංගම් වැනි නායකයින්ට ඔවුහු කෘතගුණ දැක්වූයේ පෙරළා දෂ්ඨ කිරීමෙනි. 1983 දී යාපනයේදී, හමුදා භටයින් දහ තුන් දෙනෙකු ඝාතනය කිරීමත් සමඟ ඇති වූ ජාතිවාදි අරගලය නිසා මුළු රටම ජාති වාදි මරණයේ ගිනිදැල් අතර දැවිණි. කළු ජූලිය නිසා සිදුවූ අසීමිත මනුෂ්‍ය ඝාතනය කෙතරම් කුරිරු දැයි පැවසීමට මගේ වාග් කෝෂය දුර්වලය.

එතැන් පටන් මේ දක්වාම වසර 15 ක නොනිම් යුද්ධයක අපි පැටලී සිටින්නෙමු. යුද්ධය විසින් සිදුකළ භෞතිකමය විනාශය මෙන්ම, අහිමි කළ අගනා මිනිස් ජීවිතවල වටිනාකමද ගණනය කළ නොහැකි තරමට ප්‍රබලය, සංකීර්ණය. ඉහතින් මා උත්සාහ කළේ, වර්තමානයේ උතුරු - නැගෙනහිර යුද්ධය දක්වාම මේ අර්බුදය සංකීර්ණ වීමට ඉතිහාසයේ යම් යම් සිද්ධීන් බල පෑ අන්දම විග්‍රහ කිරීමටය. ප්‍රධාන කොටම පටු දේශපාලන වාසි තකා අගතිගාමීව ක්‍රියාකල සිංහල දෙමළ දේශපාලනඥයනුත්, ඇතුළුව,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කිසිදු වග විභාගයකින් තොරව ඔවුන් අනුගමනය කළ සිංහල - දෙමළ පොදු ජනතාව වන ඇත් අඩු, වැඩි වශයෙන් මේ ප්‍රශ්නයට වගකිව යුතු වන්නෝ වෙමු. කිසිවකුට හෝ මෙහි වගකීමෙන් මිදිය නොහැක. ඒ නිසා "සාමය" යනු:- අද නිරතුරු මුවග රැව්දෙන නාමයක් බවට පත් වී ඇත. ඒ නිසා මිනිසුන් වශයෙන් අප උත්සාහ ගත යුත්තේ, ප්‍රශ්නයේ වගකීම එකිනෙකා වෙත පටවා ගන්නවාට වඩා, සාමය ඇති කරලීම සඳහා අප සතු යුතුකම කුමක්දැයි වටහා ගැනීමය.

ද්‍රවිඩ ජනතාවට වගකීම් සහිත පාලනයක් ලබාදීමේ අරමුණින් පිහිට වූ පළාත් සභා ක්‍රමය, අද උතුරු - නැගෙනහිර ප්‍රදේශවල ක්‍රියාත්මක නොවීම දෛවයේ සරදමකි. 1987 අංක 42 දරණ පළාත් සභා පනත මඟින්, පළාත් සභා ක්‍රමය හඳුන්වා දෙද්දී, ශ්‍රී.ලං.නි.ප.ය, ජ.වි.පි.ය මෙන්ම එල්.ටී.ටී.ඊ.යද රට දැඩි සේ විරුද්ධ විය. ඔවුහු පළාත් සභා මැතිවරණයද වර්ජනය කලහ. මෙයින් පෙනී යන්නේ, එක් පාර්ශව යක් මේ අර්බුදයට විසඳුමක් ගෙන ඒ මේදි, අනෙක් පාර්ශ්ව ඒ සඳහා විරුද්ධ වන බවය. 1950 ගණන් හා 1960 ගණන් වලදී රට සභා ක්‍රමයට හා දිස්ත්‍රික් සභා ක්‍රමයට සිදු වුයේද මෙයමය. ඔවුහු මේ විරුද්ධවීම් වලදී සළකා බලනුයේ හුදු දේශපාලන වාසිය විනා, විසඳුමේ ප්‍රගතිශීලීභාවය හෝ ප්‍රතිගාමීත්වය හෝ නොවේ. පළාත් සභා ක්‍රමයේ බොහෝ සාධනීය දුර්වලතා තිබුණු අතර, ඒ නිසා එය උතුරු - නැගෙනහිර අර්බුදයට එකම විසඳුම නොවුණු බව දේශපාලන විචාරකයින්ගේ අදහසයි.

උතුරු - නැගෙනහිර යුද්ධය නිමවා සාමය ඇති කරලීමට වත්මන් පොදු පෙර මුණු රජය ගෙන ආ ක්‍රියා මාර්ගය වුයේ පැකේජය හෙවත් දේශපාලන යෝජනාවලි යයි. මෙය කෙතරම් දුරට ප්‍රගතිශීලිදැයිහා යෝග්‍ය යන්න ජනතාවට වටහා දීමට රජයට තවමත් හැකියාවක් ලැබී නැත. යුද්ධයේ ප්‍රධාන පාර්ශවකරුවෙකු වෙත එල්.ටී.ටී.ර සංවිධානය සෘජුවම තම අකමැත්ත මේ සඳහා ප්‍රකාශ කර ඇත. එහෙත් එල්.ටී.ටී.ර. සංවිධානය යනු දෙමළ ජනතාවගේ නියෝජිතයා නොවන බව අද ප්‍රත්‍යක්ෂ වී හමාරය. මුලදී විශාල ආන්දෝලනයකට ලක්වූ පැකේජය පිළිබඳ විසඳුම අද එතරම් කථා බහට ලක් නොවන තරමටම ජනතාවට අමතකව ඇත්තේ, එය ජනතාව අනුමත නොකරන නිසා විය යුතුය. තවද ප්‍රධාන දේශපාලන පක්ෂ දෙපසට වී විවිධ මත දරා සිටීමද උතුරු නැගෙනහිර ප්‍රශ්නයට සුදුසු විසඳුමක් දී සාමය උදා කරලීමට ප්‍රධාන බාධාවක් වී තිබේ.

මේ නිසා වසර 14 ක් තිස්සේ දිග් ගැසුණු මේ යුද්ධයට තවමත් පිළිගත හැකි විසඳුමක් ලබා දීමට කිසිදු රජයකට හැකියාවක් ලැබී නැත. ඒ නිසා සාමය ඉටු කර ලීම සඳහා මිනිසාගෙන් ඉටුවිය යුත්තේ කවර යුතුකමක්දැයි සළකා බැලීම වටී.

ප්‍රථමයෙන්ම අපි අපටම අවංක වී අපේ හදවත්වලින්ම විමසමු. බෙදී වෙන් වී සිටීමෙන් අප ලබාගත් ජයග්‍රහණයන් මොනවාද? අපට වැදගත්වන, අපේ ජිවිතවල ඉරණම රැඳි ඇති වැදගත් ප්‍රශ්නයක් විසඳීමට අපි දේශපාලනඥයින්ට හා විවිධ ජනතා ද්‍රෝහි සංවිධානවලට භාරදී කරබා සිටින්නෙමු.සිංහල හෝ ද්‍රවිඩ හෝ දේශපාලනඥයින් වේවා, එල්.ටී.ටී.ර. සංවිධානය වේවා, ඔවුනට අවශ්‍ය යුද්ධය නිම කරලීමට නොව, ඉදිරියටම පවත්වා ගෙන යාමටය. යම් හෙයකින් යුද්ධය නිමාවට පත් වුවහොත් එල්.ටී.ටී.ර. ය භුක්ති විඳින අසීමිත වර ප්‍රසාද ඔවුනට අහිමි වනු ඇත. තවද යුද්ධය දඩ මීමා කොට බලයට ඒමට දේශපාලනඥයින්ට නොහැකි වනු ඇත. තම ජනිද ආසනයේ උග්‍ර ජාතිවාදියකු ලෙස පෙනී සිට , ජනිද දායකයා ආකර්ෂණය කොට ගන්නා, අනතුරුව ජාතික පක්ෂ සම්මේලන වලදී ඉතාමත් සාධු ජනයකු ලෙස කටයුතු කරන දේශපාලන බඩගෝස්තරවාදීන් අනන්තවත් දැක ඇත්තෙමි. මොවුන් යුද්ධයට තිරසාර විසඳුමක් ගෙන ඒයැයි ඉතිකින් අපට විශ්වාස කළ හැකිද? කොටින්ම පාර්මේන්තුව මාළු කඩයක් බවට පෙරළා ගන්නා ජනතා නියෝජිතයින් කෙරෙහි විශ්වාසය තැබීමට හැකිද? යුද්ධයට ඉත්තන් වන්නේ කවරහුද? දුප්පත් සිංහල දෙමවුපියන්ගේ දූ දරුවන් හමුදාවට ගොඩ දිව් පුදද්දී, මරාගෙන මැරෙන්නේද දුප්පත් ද්‍රවිඩ දෙමවුපියන්ගේ දරුවනිය. එබැවිනි, මේ දෙකොටිධාශයට එකම පංතියකට අයත් අසරණයින් නොවේද?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එසේම යුද්ධය නිම වනවාට විරුද්ධ වන තවත් අයද සිටිති. අවි ආයුධ කොන්ත්‍රාත් කරුවන්, බ්‍රෝකර්වරු, සමහර මහා පරිමාණ ව්‍යාපාරිකයින්, මත් ද්‍රව්‍ය ජාවාරම්කරුවන් කොමිස් කාක්කන්, දූෂිත පොලිස් හා හමුදා නිළධාරින් ඒ අතර වෙති. මේ නිසා යුද්ධය නිමා කොට සාමය උදා කරලීමේ කර්තව්‍ය වනාහි, සාමාන්‍ය පොදු ජනතාව වන අප අප අතට පැවරි ඇති යුතුකමකැයි පැවසීම අසාධාරණ නොවේ.

අප මෙලොවට බිහි වන්නේ, කිසිවකුට උරුමකම් කියමින් නොවේ. කොටින්ම වස්ත්‍රයකටද අස්වාමිකය. ජාති, ආගම්, කුල, භේද ඔස්සේ බෙදෙන්නේ අනතුරුවය. උපතේ මූලයට ගිය විට අපි සැම එක සමාන වන්නේ නොවෙමුදැයි සිතේ. එබැවින් ජාතිවාදය යනු කෙතරම් පටු ආකල්පයක් දැයි අපට වැටහිය යුතුය. පාසල් සිසුන් වශයෙන්, විශේෂයෙන්ම උතුරු - නැගෙනහිර පාසල් සිසුන් වශයෙන් යුද්ධයේ වියරු බව අපිදු අත්දැක ඇත්තෙමු. එය අනාගත සිසු පරපුරටද විඳීමට සිදුවනු දැකුමට කිසිවකු හෝ මනාප නොවනු ඇත. විශේෂයෙන්ම ත්‍රිකුණාමලය ප්‍රදේශයෙන්ම මම උදාහරණ ගත්තෙමි. එවිට ඔබටද ප්‍රාදේශිකව සාමය ඇතිකර ගැනීමට සිතෙනු ඇත. සෑම දිගු ගමනකම ආරම්භය රැඳී ඇත්තේ ඉතා කුඩා පියවරකය. එබැවින් සාමය සඳහා වූ දිගු ගමන අපි කුඩා පියවරකින්ම අරඹමු. මගේ පාසල සිංහල මධ්‍ය මහා විද්‍යාලයයි, ආසන්නම විද්‍යාලය ඕර්ස්හිල් මහා විද්‍යාලයයි . එහි සිසුහු සෑම වසරකම තම නිවාසන්තර ක්‍රීඩා උළෙළ පවත්වන්නේ, අප පාසල් ක්‍රීඩා පිටියේය. අසල් වැසි සිංහල හා දෙමළ දරුවන් අතර සුහදත්වය වර්ධනය වීමට මෙය කෙතරම් ඉවහල් වනු ඇත්දැයි ඔබම සිතන්න.

එසේම උදෑසන පාසල් පැමිණෙන විට, මහා මාර්ගය සෑම ජාතියකටම අයත් සහෝදර සිසුන්ගේ පිරියයි. අපි එකිනෙකා සුභ පතා ගත්තෙමු. ඒ හඳ පිරී සහෝදරත් වයෙනි. ජාති භේදය අසළකවත් නොමැත. ශ්‍රී ලංකාවේ සියලූම දෙනා එසේ නම්, යුද්ධය කිරීමට කිසිවකු ඉදිරිපත් නොවනු ඇතැයි, මගේ හැඟීමයි. විවිධ උත්සවවලදී ක්‍රීඩා තරඟ වලදී, අපි එකිනෙකා සම්මිශ්‍රණය වන්නෙමු. එහිදී සහෝදරත්වය නම් සංකල්පය ඉසමතු වේ. සාමය සෑම සිතකම ආශ්වාද ජනක ලෙස පැතිරී විසිරී යයි. මඟුලට, මරණයට, උපන් දිනයට, අවුරුද්දට භේදයකින් තොරව සියළු දෙනා ඒකාරාශී වේ. ජනතාවගේ සහජීවනයේ රහස එයයි. මේ අනුව අන්‍ය ජාතීන් සමඟ සාමය සඳහා වූ යුතුකම මගෙන් මෙන්ම අන් බොහෝඅය අතින්ද ඉටුව ඇතැයි මට සිතේ.

විශේෂයෙන්ම ත්‍රිකුණාමලය ප්‍රදේශයට මා අසීමිතව ඇලුම් කරමි. මෙහි වෙසෙන බහුතරය ජාති භේදයෙන් තොර, එකවතාවක් ජීවත් වීමට ආසා කරන සොඳුරුතම මිනිසුන් වෙති. ශ්‍රී ලංකාවේ සියලූ දෙනා මේ ආකාරයට සිතතොත්, මෙරට කෙතරම් සොඳුරු වනු ඇත්දැයි, සිතීමටද අපහසුය.

මේ අනුව සළකා බලන කළ, සාමය තිරසාරව උදා කර ගැනීමට ගතවන කාලය කෙතරම් අෑතක නොවන බව ප්‍රත්‍යක්‍ෂය. විශේෂයෙන්ම එක් තනි මිනිසකුට සාමය සඳහා ඉටු කළ හැකි යුතුකම් කොටස අති මහත්ය. ප්‍රථමයෙන් අපි අපටම ආදරය කිරීමට පුරුදු විය යුතුය. අනතුරුව සෑම දෙනාම එක සමාන බව සිතීමටත්, සෑම දෙනාටම එක සමාන අයුරින් සැළකීමටත් උගත යුතුය. සෑම ආගමකටම උගන්වන ප්‍රධානතම ආදර්ශය වන්නේ එයයි. ඒ සෑම මිනිසකුටම ආදරය හා කරුණාව දැක්වීමය.

මේ කරුණුවලින් පරිපූර්ණත්වයට පත් වූ විට, ඉබේම "සාමය" නම් සුර කුමරු මේ දෙරණට වඩිනු ඇත. එදිනට සියලූ ජනතාවගේ, හඳවතේ තුටු සිනා කැණින් පිනා යනු ඇත. මේ ලොවටම පායන්නේ එකම ඉරකි. එකම සඳකි. ඒ ඉර හඳයට වෙසෙනා අපි එකම ජාතියක් වන්නෙමු. ඒ මිනිස් ජාතියයි.

ඒ නිසා වර්තමානයේ උද්ගතව ඇති මේ ප්‍රශ්නය නිමාකර,සාමය උදා කරලීමට අප අපගේ යුතුකම් කොටස ඉටුකළ යුතුය. එවිට නිදහස, සමානාත්මතාවය, සතුට සපිරි සාමකාමී ලොවක් ගොඩ නැගෙනු ඇත.

අතීත මුතුන් මිත්තන් පරිදි එබඳු සාමකාමී ලොවක ජීවත්වීම ඔබේද, මගේද පරම පැතුම වේ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அந்த நாலுபேர்

பிரதேச சாகித்திய விழா போட்டியில்
1ம் இடம்பெற்ற சிறுகதை
**திரு. இ. சி. சுந்தரலிங்கம்**
(திருமலை சுந்தா)

சிவபாதம் அழவில்லை. அழுவதற்கு அவனது வாய் எப்போதே தொலைந்து போய் விட்டது. அழுவதற்கு எதிராக தன் "வன்மத்தை"காட்டவாய் தொலைந்து போனதால்.....அவன் கண்கள் மாலை மலர்ந்த மல்லிகை போல சிரிக்கவா செய்கின்றன?

அவன் சிரித்தாலும், சிரிக்காது போனாலும்.....முடிந்தவை முடிந்தவைகள் தான். போன அவனது மகளின் உயிர் போனது தான். அதனைப் பின் தொடர்ந்து மீட்டெடுக்க அவன் படித்த புத்தகங்கள்...........புத்தகங்கள்............

படித்த புத்தகங்களை பாடமாக்கி... பாடமாக்கி. அறிவு ரீதியாக யோசித்து... யோசித்து.... தன் மகளுக்கு அவன் சொன்னதுகள்.... சொன்னதுகள் தான்.....

இன்று.... இன்று......

ஆயிரத்து ஐநூறு ரூபாய் சவப்பெட்டியில் கண் உறங்கும் தன் மூத்த மகளை.. மூத்த மகளை.......

அழுதும் அல்ல... சிரித்தும் அல்ல.... அடிக்கடி ஆசை ஆசையாய், கோபம் கோபமாய் சிவபாதம் பார்த்துக் கெண்டான்.

செக்கச் சிவந்த அவளின் முகம் கருவண்டு போல கறுத்து... கறுத்து...கரியாகிய கோலம்... அவனது மனக்குடலை அறுத்து அறுத்து சிறு சிறு துண்டங்களாக துண்டங்களாக.......

மகளையும், மண்ணையும் மாறி மாறி பார்த்து... பார்த்து களைத்துப் போன கண்கள், அவனைச் சூழ ஒலிக்கும் "செத்தவீட்டு" குரல்களைக் கொண்ட முகங்களை நேருக்கு நேராக நேருக்கு நேராக எதிர் கொள்ள... எதிர் கொள்ள... ஏன் தயங்குகின்றன?? தயங்குகின்றன??? "தம்பியன் சிவா..... தலையை தொங்க போட்டு இனி ஏதும் இல்லை, முடிஞ்சு போச்சு இனி நடக்கிற காரியத்தைப் பார்க்க வேணும் எதுக்கும் வாய் திறவாமல் இருந்தால்.......மண்ணையும், மகளையும் பார்த்து பார்த்து......பயந்த பயந்த தன் கண்களை உறுட்டி வெறுட்டு தன் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து தான் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரரின் முகக்குரலுக்கு பதில் சொல்ல தொலைந்த வாயினை தேடிக் கண்டு பிடித்து தன் தொங்கிய முகத்தினைத் தூக்கினான்.

தொலைந்த வாய் தேடப்பட்டு விட்டதால் நேருக்கு நேராக எதிர்கொள்ள தயங்கிய அவன் கண்கள் பயந்தெளிந்து..... மெல்லியதாக விரியத் தொடங்கின.

அப்போதுதான் அவனுக்கு.... அவன் மகளின் செத்த வீட்டிற்கு வந்திருந்த அந்த முகங்களை எல்லாம்.... முகங்களை எல்லாம்.... ஒவ்வொன்றாக ஒவ்வொன்றாக தடவித் தடவி எதை எதையோ தேடிப் பார்க்கத் தொடங்கினான்

அவன் இனி பயப்படத் தேவையில்லை. தன்னிடம் உள்ள நியாயம் இவர்களால் ஏற்கப்பட்டு விட்டது என்று மனப்பிரம்மையில் அவன் இனி... இவன் இனி.. தொண்டைக் குழிக்குள் ஓடி ஒழிந்த நாக்கையும் வாய்க்குள் இழுத்துக் கொண்டான். தான் குந்தியிருந்த முறிந்த தென்னை மரக் குற்றியில் இருந்து எழுந்து கொண்டான் இனியென்ன.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பின்னேரம் எடுக்கலாம்......... ஐயருக்கும், கட்டாடிக்கும், வாபருக்கும், பறைமேளக்கார ஆக்களுக்கும் ஆள் அனுப்பி ஆச்சு. அசோகா பேக்கரிகாரக் ஆக்களிட்ட விறகுக்கு ஒழுங்கு பண்ணி ஆச்சு. செலவு சாமான்கள் வாங்க பக்கத்து வீட்டு துரையன் போயிட்டான். ஐம்பது கதிரைகளும், முன் வளவு ரியூற்றரியில் வாங்கும் காணும் சிவாவின் காதுகள் கூர்மையாகின.

பதிந்த மாமரக் கொப்பில் இருந்த இரண்டு காகங்கள் சிவா குந்தியிருந்த மரக் குற்றியில் வந்தமர்ந்தன.

கௌரி..... கெம்பசுக்கு போக உனக்கு எப்படி எப்படி ஆசையென்பது எனக்கும் தெரியும் அம்மா... அம்மா...... கொஞ்சம் யோசித்து பாரு... எங்கட நிலைமையை........ மாத சம்பளம் ஏழாயிரத்தில சின்னவளின் சாமத்திய வீட்டுக்கு எடுத்த லோன் ஒரு பக்கம்... அரவிந்தனை வெள்ள வேன் காரங்களிட்ட இருந்து மீட்க ஊருக்குள் பட்ட கடன்.... அதன்வட்டி... கொம்மாவின் வருத்தம் போனமாதம் திடீரென உயர்ந்த வீட்டு வாடகை, அட்வான்ஸ்..... இதுக்குள யாழ்ப்பாணத்துக்கு போக கப்பலுக்காக மாதக் கணக்கில் தங்கியிருந்த உன்ர சித்தப்பா பிள்ளைகள்..... எனது திடீர் திடீர் இடமாற்றங்களும் கொழும்பு பயணங்களும்...... நீ மூத்த மகள்..... படிச்சனி...... கொஞ்சம் யோசித்து பாருங்க அம்மா..... உன்னை கெம்பசில படிப்பிக்க எனக்கு ஆசையில்லை என்று நினைக்காத....... அதுக்கு வழி....... காற்சட்டை, சப்பாத்து போட்ட எங்கட அரசாங்க பிச்சைக்கார உத்தியோகம் தாயே....... உன்ர ரிசல்டுக்கு...... யாரின்ர காலை பிடிச்சாலும் எங்கையாவது வேலையில் நான் உன்னை பூத்திப் போடுவன் நீ ஐஞ்சு வருசம் படிச்சு கிடைக்கிற வருமானத்தை விட மகள் இப்ப எங்கட நிலையில நீ வேலைக்கு போறதுதான் நல்லது மகள்........?

"நீங்க சொல்லுவீங்க..... காசில்ல...... காசில்ல... என்று...... இப்படி முன்னமே தெரிஞ்சிருந்தால்.... இப்படி இரவு பகலாக கண்விழிச்சு படிச்சிருக்க தேவையில்லையே......... விளையாடி....... விளையாடி..... படிச்சு...... வேலைக்கு போய் இருக்கலாமே.... என்னை என்னோடு படிச்ச பிள்ளைகள்...... என்ன நினைப்பினம் அப்படி....... சீ...... உங்கட வயிற்றில நான் பிறந்தேனே......"

அந்த இரண்டு காகங்களும் போன வாரம் சிவபாதத்துக்கும் மகள் கௌரிக்கும் ஏற்பட்ட "ஏழாவது போரில்" பார்வையாளராக இதே இந்த மரக்குற்றியில் இருந்தவைதான்.

சிவபாதம் விம்மியது கௌரி வாய் விட்டு அழுதது. எல்லாமே...... எல்லாமே..... கௌரியின் மரண வீட்டுக்கு வந்திருக்கும் அந்த காகங்களுக்கும் தெரியும் என்றாலும்......... என்றாலும் பாவம் சிவபாதம் கௌரி அநியாயமாக நஞ்சுகுடிச்சு செத்திருக்க கூடாது

"சிவா எதுக்கும் செலவுக்கு யோசிக்காத...... பிறகு கணக்கை பார்ப்பம்......" பக்கத்து வீட்டு துரையனின் அப்பா கூறினார். அவனைச் சூழ்ந்து..... அவனது கூட்டாளிகள் ஒபிசில் இருந்து மூன்று பேர்....... புத்தக பிரியர்கள் நாலுபேர்...... எழுத்தாள நண்பர்கள் ஆறுபேர்..... இன்னும்.... இன்னும்.. அந்த முகங்களைக் காண.... காண.... கண்களையும், வாயையும் அடிக்கடி, அடிக்கடி, தொலைக்கவும்... கண்டுபிடிக்கவும்.... சிவபாதம் பரிதவித்தே கொண்டிருந்தான்.

பெண்களின் அழுகுரல்கள்....ஒப்பாரிகள்..... கௌரி பெட்டியில் தூங்கும் அந்த மண்டபத்தில் இருந்து...... இருந்து.......

யாரோ ஒருவர்... தேவார, திருவாசகங்களை....... பட்டினத்தார் பாடல்களை பாடிக் கொண்டிருந்தார். மிக அமைதியான அந்த சூழலில்....... அந்த பாடல்கள்.... பாடல்கள்....... அழுகைகளையும்...... ஒப்பாரிகளையும்...... வென்றவைகளாக..... வென்றவைகளாக.....

"ஐயர் ஆக்களிட்ட போனவர் வந்திட்டார்........... எல்லாம் சரிதானே.......... முற்காசும் கொடுத்தாச்சே.....?

ஐயர் ஆக்களிட்ட போன சிவபாதத்துக்குதூரத்து உறவான "சாத்திரியார் தேவர்" முகத்தை தொங்க போட்டுக் கொண்டு வந்து நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவா..... இவங்கள பிடிக்கிறது இப்ப மிக..... மிக..... கஸ்டம். ஐயர் தீ முட்டித் தர செத்த வீட்டுக்கு வந்து மரணச்சடங்குகளை செய்ய மாட்டாராம். இருக்கிற ஓரே ஐயர்... அப்படி வந்தால் எழுநூற்றி ஐம்பது ரூபாய் கேட்கிறார். சடங்கு சாமான்கள் நாங்க வேண்ட வேணுமாம். வாபர் சொல்றார்...... தான் இப்பஇந்த காரியங்களுக்கு போறதில்லையென்று. போனாபிள்ளை குட்டிகளிட்ட இருந்து தப்பமுடியாதென்று.....பிறகு இவர்தான் இன்னொரு பாபரை பிடிச்சு தந்தார். ஒரு நாளைக்கு ஐநூறு ரூபாய். கட்டாடிக்கு சுகமில்லை ஆட்டோ அனுப்பட்டாம் பிரேதத்துக்கு "எச்ச வெள்ளையை" எங்கள கட்டட்டாம். தனக்கு பன்னாங்கு பின்னத்தெரியாதாம். பறை மேள காரர்களும் இப்ப முன்னைய போல ஒரே அயலில் இல்லை. பாறை ஒரு தொங்கல் ஊது குழல் இன்னொரு தொங்கல்.... சே...."

"சாதி... சம்பிரதாயங்கள் எல்லாம் இனி இப்படித் தான்..... உத்தியோகம்... வெளிநாட்டு உழைப்பு..... கல்வி.... இப்ப....... அவையள் அவையளை நல்லா மாத்திப் போச்சு...... இருந் தாலும்.... எங்கட சம்பிரதாயங்களை அழிய விடக்கூடாது. என்ன செலவென்றாலும்... இந்த நாலு பேரையும்..... கொண்டு வந்தே தீர வேண்டும்....."

சிவாவின் வீட்டுக்காரர், சிவாவை சுற்றிநின்ற கூட்டத்தில் வாய் மொழிந்தார்.

"ஐயர் காற்சட்டை, சப்பாத்து, போட்டு கழுத்தில் "ரை" கட்டி கோயிலில் சுவாமிக்கு பூசை ஆக்கிற காலம் வராட்டி பார்" துரையின் தகப்பன் இது செத்த வீடென்பதையும் மறந்து வந்த சிரிப்பை அடக்க முடியாமல் முன் வரிசைப் பற்களை காட்டியே சொன்னார்.

'இப்ப இவையள்...... இந்த நாலு பேரும் இல்லாமல் என்ன செய்வது.......? முட்டி வந்த வார்த்தைகளை சொண்டோடு வைத்துக் கொண்டார், சிவாவின் அலுவலக நண்பரொருவர்.

சிவாவின் கண்கள் தன்னைச் சூழ நின்ற அனைவரதும் முகங்களை...... முகங்களையும்...... பார்த்து.....பார்த்து...... தன் குழிக்குள் ஆடி அசையாது நின்ற போது...... அவனையறியாமல் அவன் நா முதல் முதலாக எழுந்தது.

ஏன் இந்த நாலு பேரும் இல்லாமல் செத்த வீட்டை செய்ய முடியாதோ....... இவைய ளுக்காக....... இவையல் போடும் சட்ட திட்டங்களுக்காக நாம் இனி ஏன் காத்திருக்க வேண்டும்? எங்கள்..... எங்கள்.... காரியங்களை நாங்களே செய்தாலென்ன? இனி செய்தால் இனி இதுக்கு தான் என்று பரம்பரை, பரம்பரையாக பிரிச்சு வைச்சிடுவியல் என்ற பயத்தில் அதில் இருந்து மீண்டெழும் இந்த சமுதாய அமைப்புகாக நாமேன் பழைய முறைமைக்கு கட்டி இழுக்க வேண்டும்?

"சிவா குதர்க்கம் பேசாத..... வழமை முறையை உன்ர புத்தக பார்வையால மாற்றப் பார்க்காத.......? ஆறேழு குரல்கள் மழை பெய்யத் தொடங்கின.....

மண்ணுக்காக....... நாளாந்த வாழ்வுக்காக..... மண்ணில் தினம், தினம் மடியும் எத்தனை........ எத்தனை....... உயிர்கள்.... இவர்களின் ஈமக்கிரிகைகளுக்கு இந்த நாலு பேரும் தேவைப்பட்டார்களாம். இவர்களுக்கு இல்லாத இவர்கள்... கோழையாக நஞ்சு குடித்து செத்துப்போன எனது மகளுக்கு... சே.....எங்கள் காரியங்களை நாங்களே செய்ய வேண்டு மென்ற முறைமை....... இனி எங்கும்.......

சிவபாதம் மனதில் உள்ளதை...... கண்களை சுழல விட்டான்......"மச்சான் நாங்க இருக்கிறம்.... எங்கட காரியத்தை நாங்களே பார்ப்பம்"

"அப்ப ஐயர் சொல்ர மந்திரம்....."

"அதுவா....... அதுக்கு நான் இருக்கன்..." செலவு சாமான்களோடு வந்த துரையன் சொன்னான்.

அந்த பழைமை வாய்ந்த மழைத் தூரல்களுக்குள் குடையில்லாமல் துணிந்து இவர்கள் நடக்கத் தொடங்கியே விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සාමය ස්වප්නයකි ලක් මව්ට අපේ

පී. රශානි කාංචනා අපොන්සු මෙනවිය
ත්‍රි/සිංහල මධ්‍ය මහා විද්‍යාලය
ජාතික පාසැල (12 වසර, කලා)

දස මස කුසේ රඳවා දෝතට ගත්ත
රුධිරය සමඟ දම් මනසට දැම්ම
ඒ මැව් සිහින උඩු සුළඟේ විසිරෙව්ව
සිරි ලක උපන් එපුතුන් හැම ඇත ගත්ත

යුග යුග ගනන් යුද්ධය පවතින්න ඇති
අද මෙන් එදත් මිනිසුන් දිවි දෙන්න ඇති
කල කිසි නොදත් ලක් මව වැළපෙන්න ඇති
මොහොතින් මොහොත රට පිරිහි යන්න ඇති

එදවස වෙහෙසුණේ පර සුද්දන් එළවන්නයි
අද අප හදන්නේ රට මැන වෙන්කර ගන්නයි
දැන හෝ නොදැන හෝ යුද්ධය වෙත කැපවෙන්නයි
මෙලොව ගියොත් වන්නේ මරු වළඳන්නයි

මිනිසුන් අතර නොමිනිස් කම් මතුවෙන්නයි
එකෙකු මරා අනෙකා රට ගෙන යන්නයි
එලෙසින් සිතා යුද්ධය වෙත පිවිසෙන්නයි
අවසන අනේ.......ලක් මව් විකුනන් කන්නයි

උතුරට දැනෙන්නේ නැතිදෝ වෙල් සුවඳ
දකුණට දැනෙන්නේ නැතිදෝ තල් මල් සුවඳ
සිග කොටි පැටවුනේ නොදනෙද සොහොයුරු සුවඳ
රට තව තවත් දෙපිලට වනසනවද නිබඳ

මම ඉපදුනේ දකුණේ එඩිතර කමට
මම ඉපදුනේ උතුරේ එඩිතර කමට
අප ඉපදුන රටේ අයිතිය අපට
කියමින් විකුම් පාතියි දෙපිලම සැපට

ලොව දිනවන්න තිබු ණුවනැස මැන වැරදි
කොඩි නැවතිලා යුධ අවි ළඟ සිරවී
රටේ තව තවත් ජිවිත මරු තුරුලට දී
දාදු කෙළිනවා උන් හා මූන් එක් වී

උතුරේ මවත් වැළපෙති දරුවන් හින්දා
දකුණේ මවක් වැළපෙති දරුවන් හින්දා
එලෙසින් රටේ මව් වරු ගිනි උහුලන්දා
කෙලෙසින් සැනසේදෝ යුද්ධය දත් උන්දෑ

සුසුමක් සේම යුද්ධය හරි හුරු පුරුදුයි
එය නැති වුවොත් පාලකයන් හට පාඩුයි
ජිවිත ගන්න බිල්ලට මාරයා සුරයි
එකෙකුන් නොමැරුවොත් ගිනි හටයට පාළුයි

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දෛවය මෙයද සිරි ලක් මවකි නුබේ
සුන් වී ගියෙද ගොඩ නැගී ඒ සිහින නුබේ
ස්වප්නය වුණිදා සාමය දරුවන්ට අපේ
යුද්ධයට දෙන්න දරුවන් තව නැහැ ඇකයේ

අහස් ගඟ දුර ලෙසින් මේ පොළෝ තල වෙතට
සාමයත් බෝ දුරයි අත පෙවිය නොහැකි ලෙස
ඉතිං.....අප දෙවියනේ ඉල්ලනා සාමය
නොදෙන්නේ කිමැයි කිව අප අපට හිමි තැනය

අගාධය සේ යුද්ධයේ මුල් පුරැක
කව්රුන්ද ගෙනාවේ තම්බපණිය වෙතට
එය කෙලෙස සිදුවුවත් උරුම විය වත්මනේ
අපට හිමි පඬුරු ලෙස බියකරු වු යුද්ධයම

තම ගිනිභවය අනෙකුන්ගේ පපුව සිඹ
යනවි නොහැගුණිද ඔහු නුඹ වන් එකෙකු බව
මිය ගිය ඔහු නමින් මට කඳුළැලි සලන විට
ශාපය වදියි කොහේ සිටියත් නුඹට

සිහල දෙමළ රුහිරශ රට වපුරනවා
හතු පුදින ලෙසින් මරණ මංචක ඉඳිවෙනවා
තව තව හිතේ බල තණ්හා වැඩිවෙනවා
ලොකු උන් ඉදන් පොඩි උන් මරවන් කනවා

උතුරේ සිටිය දරුවන් කොටියන් වන්නයි
දකුණේ සිටිය දරුවන් සිංහයෝ වන්නයි
තමලෙහි උපන් ශක්තිය උන් පෙන්වන්නයි
මරුවා සමඟ දෙපිලම සැහවී යන්නයි

යුද්ධය තකා ජිවිත උකසට දෙනවා
සිරිලක උපන් දරුවන් මලිනව යනවා
තැන් තැන් වලින් මිනිවල් මතුවෙනවා
යුධ අවසනේ ඉන්නට කවුරුත් නැතිවෙනවා

උන් මුන් වුවත් සැම ලක් දරුවන් නේදෝ
වත්මන් රටේ ජිවය අප සතු නේදෝ
ඒ ගැන නොසිතා පොරපිටියේ තවමත් ඇයිදෝ
සමුදි යන්න යුධ පිටියෙන් හිත නැතිදෝ

විසිරුණු මුතු කැට එක්කෙරට නැවත
සදනෙමු එක්ක මහ සයුරේ මුතු ඇටය
ලොව අන් රටට ආදර්ශය දෙන ලෙසින
අවි බිම තියමු එක් ධජයක් ළඟ රැස්ව

අවි රැදි දෑත් ගිනි අවියෙන් ගිලිහෙන්නයි
යුද්ධයේ තියෙන බියකරු බව වැටහෙන්නයි
සිඳ බිඳ දැමූ අත්තටු පරවියනට දෙන්නයි
රණ බිම තුලින් නොයනා ලෙස සමුගන්නයි

අඩියෙන් අඩිය සාමයේ මල් පිඹිදෙවා
සිරි ලක් මවගේ හද ගිනිදැල් වියැකේවා
කඳුළැලි වියැති හසරැලි මුව රජවේවා
තව එක් වරෙක හෝ යුධ නොම ඇතිවේවා

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவு இன்று

தி. விஸ்வரூபன்
திட்ட உத்தியோகத்தர்
பிரதேசச் செயலகம், திருகோணமலை

## அறிமுகம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் இந்து மகா சமுத்திரத்தை கீழ் திசையில் அமைந்துள்ள பட்டனமும் சூழலும் பிரதேசச் செயலாளர் பிரிவு வடக்கே குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவையும் மேற்கே மொறவெவா தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவையும் தெற்கே கிண்ணியா பிரதேசச் செயலாளர் பிரிவையும், உட்துறை முகத்தையும் எல்லையாகக் கொண்ட 148 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேசமாகும்.

## நிர்வாக அமைப்பு

நிர்வாக ரீதியில் இது இரண்டு உள்ளுர் ஆட்சிப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

(1) நகராட்சி மன்றம்
(2) பட்டணமும் சூழலும் பிரதேசசபைப் பிரிவு

இவ் இரு உள்ளுராட்சிப் பிரிவுகளையும் உள்ளடக்கிய பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் பிரிவானது 42 கிராம சேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

## குடித்தொகை

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற யுத்த சூழ்நிலை காரணமாக 1981ம் ஆண்டிற்கு பின் சரியான கணக்கெடுப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் எடுக்கப் படவில்லை. கிராம சேவகர்களைக் கொண்டு 1996ம் ஆண்டு இறுதியாகத் திரட்டப் பட்ட மதிப்பீட்டின் படி மொத்தம் 21, 12, குடும்பங்களைக் கொண்ட 100, 418, பேர் இங்கு வாழ்கிறார்கள். இதில் தமிழர்கள் 66, 167 பேர் (66%) சிங்களவர் 20, 046, பேர் (20%) முஸ்லீம்கள் 12, 433 பேர் (12%) எனையோர் 1, 772 பேர் (2%) இதில் 48, 118, பேர் ஆண்கள் 52, 300 பேர் பெண்கள்

## விவசாயம்

விவசாய நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பளவு 4135 ஏக்கர்கள் ஆகும். விவசாய நடவடிக்கை சிறுபோகம், பெரும்போகம், ஆகிய இரண்டிலும் நடைபெற்று வந்தது. பெரிய நீர்பாசனத்தின் கீழ் உள்ள ஒரு குளமும் சிறிய நீர்பாசனத் திட்டத்தின் கீழ் 11 குளங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1498 ஏக்கர் நிலங்கள் நீர்பாசனம் மூலம் மிகுதி மானாவாரியாகவும் விவசாயம் செய்யப்படுகிறது. 2500 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபடும் குடும்பங்கள் நாட்டில் இருக்கும் யுத்த சூழ்நிலையின் காரணமாக தற்போது பெரும் பாலான விவசாய நிலங்கள் கைவிடப்பட்டுள்ளன. மக்கள் விவசாய நிலங்கள் உள்ள பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்தும் உள்ளார்கள்.

மக்களை மீள் குழயேற்றுவதன் மூலமும் குளங்களை புனரமைப்பது மூலமும் இத் துறையை மேலும் வளர்ச்சிக்கு உட்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்பிடி

இப்பிரதேசச் செயலாளர் பிரிவின் கடல் எல்லை 25 மைல்களாக உள்ளது ஏறத்தாள 6000 குடும்பங்கள் மீன்பிடித்துறையை நம்பி வாழ்கின்றனர். திருகோணமலை பகுதியில் அதிகம் மீன் பிடிக்கப்படும் பிரதேசமாக இப்பிரிவு இருப்பதனாலும், வேறு இடங்களில் இருந்து பெருமளவு மீனவர்கள் இங்குவந்து மீன்பிடித் தொழில் ஈடுபடுகினறனர். நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பினால் மீன்பிடிப்படகுகள், வலைகள், உபகரணங்கள் அழிக்கப்பட்டதனாலும், தற்போது ஆழ்கடல், மீன்பிடி தடைசெய்யப்பட்டும், கரையோர மீன்பிடியில் நேரக்கட்டுப்பாடும் இருப்பதனாலும் இத்துறை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனினும் இங்கு பிடிக்கப்படும் மீன் பிரதேசதேவைக்கு அதிகமாக இருப்பதனால் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

வெளிநாடுகளில் அழகுக்காக வளர்க்கப்படும் வண்ண மீன் இனங்களும் இங்கு அதிகம் பிடிக்கப்படுகின்றன.

இத்துறையை விருத்தி செய்யவேண்டின் நாட்டில் உள்ள யுத்தசூழ் நிலை மாற வேண்டும்.

## கைத்தொழில்கள்

ஆசியாவிலேயே சிறந்த இயற்கைத்துறைமுகம் இங்கு அமைந்துள்ளமை இப்பிரதேசத்திற்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. பிறிமா ஆலையானது 700 பேரிற்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளது. இங்கு ஆண்டு ஒன்றிற்கு ஏழு இலட்சம் மெற்றிக் தொன் தானியம் அரைக்கப்படுகிறது் இங்கு கப்பலில் பொருட்கள் ஏற்றி இறக்கும் வசதியும் துறைமுகத்தளமும் உள்ளது.

சீனன்குடாப் பகுதியில் டோக்கியோ சீமேந்து தொழிற்சாலை ஒன்று அமைந்துள்ளது. இங்கு மூலப் பொருட்கள் கொண்டுவரப்பட்டு அரைக்கப்பட்டு சீமெந்து தயாரிக்கப்படுகிறது. மூலப் பொருட்களை கையாளக் கூடியவகையில் துறைமுக அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

சீனன்குடாவில் அமைந்துள்ள பெற்றோலியம் சேமிப்பு நிலையத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட மிகப் பாரிய எண்ணைக் குதங்கள் பல உள்ளன. இவற்றில் மிகச்சிலவே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இங்கு பெற்றோலியப் பொருட்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு சேமித்து வைக்கப்படுவதுடன் கப்பல்களுக்கு வேண்டிய எண்னை வளங்கப்பட்டு வருகிறது. பட்டு வருகிறது. இதற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது.

கப்பல் கூட்டுத்தாபனத்தின் கீழ் கப்பல்களை பழுது பார்க்கும் இடமும் சீனன்குடாவில் அமைந்துள்ளதுடன் பல நூற்றுக்கணக்காலவர்களுக்கும் வேலை வாய்ப்பை அளித்துள்ளது.

இப்பிரதேசங்களில் வாழ்பவர்கள் செங்கல் தொழில், பேக்கரி, அச்சகத்தொழில், தச்சுத் தொழில், வெல்டிங் தொழில், கட்டிட நிருமாணத்திற்கான சீமெந்துக் கற்கள் தயாரித்தல், மின்சார தூண் தயாரித்தல் போன்ற சிறு கைத்தொழில்களிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் உள்ள தற்போதைய சூழ்நிலைகள் மற்றைய துறைகளைப் போலவே இத்துறையினையும் மிகவும் பாதிப்படைய வைத்துள்ளது. சகஜ நிலை திரும்பும் பட்சத்தில் இப் பிரதேசம் கைத்தொழில் வர்த்தக வலையமாக மாற்றுவதற்கான திட்டங்கள் இருக்கின்றன.

## கல்வி

இப்பிரதேசப்பிரிவில் 49 பாடசாலைகள் உள்ளன. பல்கலைக்கழக் கல்லூரி ஒன்றும், அரச தொழில் நுட்பக் கல்லூரியும், 4 தனியார் தொழிநுட்ப கல்லூரிகளும் உள்ளன. 1981ம் ஆண்டு கணிப்பீட்டின் படி 79.5% மாணவர்கள் எழுதப்படிகத் தெரிந்தவர்கள். இவ் விகிதம் தற்போது மேலும் அதிகரித்திருக்க வேண்டும். இந்த மாவட்டத்திற்கு இவ்வாண்டு (1998) பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியும், புலமைப் பரீட்சை தேர்வு புள்ளியும் உயர்நிலைப் புள்ளியாக நிர்ணயிக்கப் பட்டுள்ளதில் இருந்து தெளிவாகிறது.

எனினும் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலானவற்றில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் இல்லை. உபகரணங்கள் இல்லை. கம்பியூட்டர்கள் இல்லை.

## சுகாதாரம்

இப்பிரதேசச் செயலகப்பிரிவில் ஒரே ஒரு ஆதாரவைத்தியசாலையும் சில சுகாதார நிலையங்களும் உள்ளன இவ்வைத்தியசாலையிலேயே திருகோணமலை மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசசெயலாளர் பிரிவு மக்கள் தங்கியுள்ளனர். இங்கு விசேட துறை வைத்தியர்களின் பற்றாக்குறை அதிகம் உள்ளது. இதனால் இங்கு சுகாதார வசதி அளிக்க முடியாமல். குருநாகல், கண்டி, கொழும்பு, போன்ற இடங்களுக்கு மக்கள் அனுப்பிவைக்கப் பட்டுவருகின்றனர் அவர்களாகச் செல்கின்றனர்.

## வீதிகளும் போக்குவரத்தும்

இப்பிரதேசச் செயலகத்தில் உள்ள திருகோணமலை நகர், போக்குவரத்து சேவையின் மத்திய நிலையமாக உள்ளது.

வீதிகள் கிட்டத்தட்ட 68 கி.மீ நீளமானது. 34.24 கி.மீ. நீளமான ஏ பிரிவு வீதியும் 14Km நீளமான பி. பிரிவு வீதியும் வீதி அதிகார சபையின் கீழும் ஏனைய வீதி அபிவிருத்தி திணைக் களத்தின் கீழும், உள்ளூராட்சி சபைகளின் கீழும் அமைந்துள்ளது. திருகோணமலை பிரதான புகையிரத நிலையமும், சீனன்குடா, புகையிரத நிலையமும் இப் பிரிவிற்குள் அமைந்துள்ளன.

வீதிகள் சரியான பாராமரிப்பு அற்று நகரின் மையப் பகுதியில் கூட இருப்பதைக் காணலாம்.

## ஏனைய சேவைகள்

இப்பிரதேச செயலாளர் பிரிவில் இரு பெரிய தபாற்கந்தோரும், உபஅஞ்சல் அலுவலகங்களும் உள்ளன. தனியார் தபாலகங்கள் மூன்றும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத் தொடர்பு சீரா நிறுவனத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய அளவில் இல்லை. நீர் வினியோகம் கடற்படைதளம் மூலமும், நீர் வடிகால் கந்தளாய் குளத்து நீர் தேசிய நீர்வழங்கல் சபை மூலமும் திருப்திகரம் இல்லா விட்டாலும் மேற் கொள்ளப் பட்டுவருகின்றன.

வட பகுதிக்கான பயணிகள் போக்குவரத்து இடைக்கிடை கப்பல் மூலம் இங்கிருந்து நடை பெறுகின்றன. ஐ.சி. ஆர் சி. நடத்தும் கப்பல் மூலம் தபால்களும் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. மின்சாரம் வினியோகம் நகரப் பகுதியில் திருப்திகரமாக உள்ளது. எனைய பகுதிகளுக்கான வினியோகம் சரியான முறையில் கிடைப்பதில்லை. நகரில் மரக்கறி, மீன் சந்தைகள் உள்ளன.

வ. கி. மாகாண சபையின் அமைச்சுக்கள் திணைக்களங்கள் அனைத்தும் இங்கு அமைந்துள்ளன. இலங்கை வான்படை தளம் சீனன் குடாவிலும், இராணுவ பிரதான முகாம் ஒன்று பிளான்ரன் பொயின்றிலும், பல சிறு இராணுவ முகாம்கள் அங்கொன்றும் இங்கொன் றுமாகவும், பிரதான பொலிஸ் நிலையம் உவர்மலை சந்தியிலும் சிறிய நிலையங்கள் பலவும் இலங்கையின் பிரதான மிகப்பெரிய கடற்படைத்தளம் டொக்யாட்டிலும் அமைந் துள்ளன. வரலாற்று பெருமைமிக்க சிவன் கோவிலான திருக்கோணேஸ்வரம் இங்கு அமைந்துள்ளதுடன் பல பிரபலமான கோவில்கள் இங்குள்ளன. இவைகள் அனைத்தும் கடந்த கால நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டிருந்தன. தற்போது ஒவ்வொன்றாக புனரமைகப் பட்டு வருகின்றன.

நாட்டின் நிலைமை சீரடையும் பட்சத்தில் இப்பிரதேசம் அபிவிருத்தி அடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**வறியவர்களுக்கு வழங்கி இன்புறுவதைக் கண்டு**

**நாம் இன்புற வேண்டும்**

**(கிருபானந்த வாரியார்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயம் மலர்ந்திட இணைந்து நாம் உழைப்போம்

உலகினில் உயர்ந்தது மானிட வர்க்கம்
உளந்தனில் பதித்திடும் மாபெருந் தத்துவம்
சாதிகள் சமயங்கள் பேரிலே தோன்றிடும்
சதிச்செயல் கழைந்திடல் வாழ்விலே உத்தமம்

போரிலே அழிவது மனிதனின் குலமென்றால்
போற்றிடும் மானிடம் தாழ்ந்திடு மல்லவோ
பாரிலே பலநூறு ஆயிரம் ஞானிகள்
பண்புடைச் செயல்பல சாற்றினா ரல்லவோ

உத்தம புருஷர்கள் உதித்திட்ட மண்ணிலே
உயிர்க்கொலை பெருகியே அதர்மத்தின் தாண்டவம்
அகிலத்தை ஆட்கொள்ள அழிந்தது நற்றவம்
அனைவரும் மெச்சிடும் அகிம்சையும் மடிந்தது

வாழ்க்கையிற் பொருளில்லை வருத்தத்திற் குறைவில்லை
வருங்கால வசந்தத்தின் நம்பிக்கை ஒளியில்லை
சாதனை புரிவதாய்ச் சாற்றிடும் வகுப்பினர்.
சோதனைக் களத்திலே சோர்வோடு வீழ்கின்றார்

ஏனிந்த அவலங்கள் ஏழ்மையின் பாடுகள்
எல்லையே இல்லாத ஏக்கத்தின் மூச்சுக்கள்
சிந்தித்துப் பாரடா மனிதாவென் றிறைவனே
சிறப்பாக அறிவினை ஆறாகப் படைத்துள்ளான்.

மனத்திலே தைரியம் மதங்கொண்டு எழுந்திட
மனிதர்நாம் அனைவரும் ஒற்றுமைக் குடையின்கீழ்
அன்புடன் அகிம்சையை அறத்தினைப் பற்றியே
அரசினர் தயவினால் கிடைத்திடும் வளங்களால்

சமூகத்தின் உயர்ச்சியைக் குறிக்கோளாப் கொண்டென்றும்
சகலரும் பணிபுரிந் தெம்மினம் பயனுற
கல்வி அறிவினைப் பெருக்கியும் தொழில்செய்தும்
கற்பு நெறியொடு ஒழுக்கத்தைப் பேணியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகள் அநாதைகள் ஊனமுற் றோர்க்கெல்லாம்
அகத்திலே வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்த்தியும்
மனத்திலே சாந்தியும் கருணையும் குடிகொள்ள
மாண்புடைச் செயல்களும் நீதியும் நிலைத்திட

வறுமையோ வற்றிட வளங்களோ மலிந்திட
வன்செயல் ஒழிந்துநம் வாழ்க்கையும் சிறந்திட
மனத்திலே புனிதராய் பூசனை புரிந்துநம்
மலத்தினை நீக்கிடும் ஈசனின் அருள்பெற்று

பண்டைய கலைகளை அழியாமற் பேணியும்
பண்புடன் கலாசாரம் போற்றியே அனைவரும்
இன்பமாய்ச் சமுதாய மலர்ச்சியில் திழைத்திட
இகத்திலே இணைந்தொன்றாய் உழைத்திடு வோமே.

**திருமதி. எஸ். சி. சற்குணராஜன்**
இல. 40. அருணகிரி றோட்,
திருகோணமலை.

"நாட்டுப்புறப் பண்பாட்டியல் என்பது கிராமாந்திர மக்களின் அனுபவத்தின் பொக்கிசம். மனிதனோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல்லாது இதயத்தோடு இதயத்தைப் பிணைத்து வைக்கின்றது. அவர்களுடைய தனித்தன்மையைக் குலைக்காமல் ஒற்றுமையை வளர்க்கின்றது இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் ஒட்டு மொத்தமான அல்லது தனிப்பட்ட உணர்ச்சிகளை அது பிரதி பலிக்கின்றது"

**சங்கர் சென்குப்தா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழா–1998
# ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල - 1998

**பரிசு பெற்றோர் விபரம் ~ ත්‍යාග දිනාගත් අයගේ විස්තර**

## பாடசாலை மட்டத்திலான கட்டுரைப் போட்டி (தமிழ்)

1ஆம் இடம் :- **செல்வி. சு. பத்மபிரியா**
தி/விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம்

2ஆம் இடம் :- **செல்வி. கு. சுகுணா**
தி/விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம்

3ஆம் இடம் :- **செல்வி. கு. பிரிந்தா**
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி

## පාසැල් මට්ටමින් පවත්වූ රචනා තරඟය (සිංහල)

**01. පළමු වන ස්ථානය:-**

එච්.ඒ.ජේ.මධුභාෂණ පෙරේරා, මෙනවිය
ත්‍රි/සිංහල මධ්‍යම මහා විද්‍යාලය, ත්‍රිකුණාමලය.

**02. දෙවන ස්ථානය:-**

**පුශානි අෑන් බෝරම් මෙනවිය**
**ත්‍රි/සිංහල මධ්‍යම මහා විද්‍යාලය, ත්‍රිකුණාමලය.**

**03. තුන්වන ස්ථානය:-**

**ජේ.එම්.ඩී. හේමාලි මෙනවිය**
**ත්‍රි/නාලන්ද. මහා විද්‍යාලය**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப் போட்டி

1ஆம் இடம் :- **திருமதி. நாகராணி. சீதரன்**
தி/புனித மரியாள் கல்லூரி திருக்கோணமலை

2ஆம் இடம் :- **திருமதி. ம. பற்குணம்**
மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்விளையாட்டுத்துறை அமைச்சு
திருக்கோணமலை.

3ஆம் இடம் :- **ஜனாப் பா. முகமது அஸ்ஸ்**
39, பாடசாலை ஒழுங்கை, திருக்கோணமலை.

## சிறுகதைப் போட்டி

1ஆம் இடம் :- **திரு. சி. சுந்தரலிங்கம்** (திருமலை சுந்தா)
31/1, சமாது ஒழுங்கை, திருக்கோணமலை.

2ஆம் இடம் :- **திரு. க. சந்திரன்** (திருமலை சந்திரன்)
13, சிவன் வீதி, திருக்கோணமலை.

3ஆம் இடம் :- **ஜனாப் பா. முகமட் சாலி** (திருமலை முகமட்சாலி)
36/14, தக்கியா வீதி, திருக்கோணமலை.

**කවි රචනය:-** විශේෂ ත්‍යාග

ජී. ඊශානි කාංචනා අපෝන්සු මෙනවිය
12 වසර - "කලා අංශය"
ත්‍රි/සිංහල මධ්‍යම මහා විද්‍යාලය
ත්‍රිකුණාමලය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை பட்டணமும், சூழலும்
பிரதேச கலாசார உத்தியோகத்தரும். பிரதேச சாகித்திய விழாக்குழு
செயலாளருமாகிய

## திருமதி. சத்திய பாமா மகேந்திரராஜா அவர்களின்

# நன்றியுரை

கலை கலாசாரபண்பாட்டுக் கோலங்களை மிளிர்வடையச் செய்வது யாவரினதும் பாரிய பொறுப்பாக உள்ளது. அவ்வாறு இவற்றிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக் கூடியவகையில் இன்று நாளடாவிய ரீதியில் பிரதேச மாகாண, தேசிய மட்டங்களில் கலை ஞர்கள், கலைப்படைப்பாளர்கள் இலக்கிய வாதிகள் பயன்படத்தக்கவகையில் இலக்கிய விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ்வாறே இயற்கை எழில் கொண்டிலங்கும் இதிகாசம், புராணம் எடுத்துக் கூறும். திருக்கோணமலை பட்டினத்தில் இரண்டாவது தடவையாக பிரதேச சாகித்திய விழா கொண்டாடப்படுவது யாவரினதும் பாராட்டுக் குரிய தாகும். இவ்விழாவின் பொருட்டு பல வழிகளிலும் முன்னின்றுழைத்த யாவர்க்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுளேன் பின் வருபவர்களுக்கு விழாக்குழு சார்பில் எனது நன்றிகள்.

✤ பிரதேச சாகித்திய விழாவை நடத்துவதற்கு ஆரம்பமுதல் தலமைதாங்கி வழி நடாத்திய திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர். ஆலோசனை வழங்கிய வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம், ஆலோசகர் திரு. எஸ். அருளானந்தம் திருக்கோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர், திரு. எஸ். தங்கராஜா விழாவின் பொருட்டு பலபணிகளிலும் செயல்பட்ட பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள் வலயக்கல்வித்திணைக்கள உத்தியோகத்தர் அதிபர்கள், ஆசிரியர்கள்.

✤ பிரதேச சாகித்தியவிழா பாடசாலை மட்டத்திலான கட்டுரைப் போட்டியை நடாத்தி உதவிய வலயக்கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றிய மாணவர்கள் திறந்த போட்டியாக நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டித் தெரிவை செவ்வனே செய்து முடித்த நடுவர்கள் போட்டியில் பங்கு பற்றியவர்கள்.

✤ இவ்விழாவின் பொருட்டு நிதி உதவி வழங்கிய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம் திருக்கோணமலை ப.நோ. கூட்டு றவுச்சங்கம் (வ-து) கோவிலடி, அருணகிரிநாகர், பாலையூற்று அன்புவழிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பிரதேசச் செயலக நலன்புரிப்பகுதி, பரிசில்களுக்கான நூல்களை வழங்கிய வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு திருக்கோணமலை.

விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்கி பெருமைப்படுத்தியவர்கள்.

மலருக்கு அட்டைப்படம் தயாரித்து வழங்கியவர்.
**(திரு. மா. சிவதாசன் ஆசிரியர் தி.இ.கி.மி. ஸ்ரீகோணேஸ்வரா இந்து கல்லூரி**

✤ மலரை அழகுற அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ கணேச பதிப்பகம். திருகோணமலை.

விழாவின் சிறப்பிற்காக கலைநிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கி ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி தி/ஜமாலியா முஸ்லீம் வித்தியாலயம், தி/சிங்கள மத்திய மகாவித்தியாலயம் தி/புனித மரியாள் கல்லூரி, தி/சாஹிரா மகா வித்தியாலயம், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்ட மாணவர்கள்

✤ விழாவைச் சிறப்புற நடத்துவதற்கு மண்டப ஒழுங்குகளை ஏற்படுத்தி உதவிய தி/பிரான்சிஸ் சென்சேவியர் மகா வித்தியாலயம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

✤ ஒலி ஒளி அமைத்துத்தந்தவர்கள் விழாவின் பொருட்டு பலவகைகளிலும் உதவியவர் கள் அனைவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

திருக்கோணமலை

எமது நிறுவனம்

- நுகர்பொருள் விநியோகம்
- வாகன சுத்திகரிப்புச் சேவை'
- ஆட்டோ ரிக்சோ சேவை
- கட்டிட நிர்மாணம், தளபாட ஒப்பந்த வேலைகள்.
- பாடசாலை மாணவர்களது கொப்பி, எழுதுபொருள் உபகரண விநியோகம்.
- கனரகப் பொருட்கள் விநியோக சேவை.
- சகல வித புடவை விற்பனை சேவை.
- கோழிக்குஞ்சு, கோழிமுட்டை, கோழி இறைச்சி, கோழித்தீன் விநியோகம்
- மரணச்சடங்கு வாகன வாடகைச் சேவை.
- எரிபொருள் விநியோகம்
- வாகன வாடகைச் சேவை
- ஆட்டோ ரிக்சோ விநியோகம்.

## அத்துடன் இன்று அறிவுப்பசி தீர்க்க

★ உயர் வகுப்பு மாணவர்களுக்கும், கல்வியாளர்களுக்கும்
★ பல்கலைக்கழக மாணவர்களுக்கும், இலக்கிய ஆய்வாளர்களுக்கும்.
★ அறிவுப் பசியுடையோர்க்கும் வாசித்து இன்புறவும் அறிவைத் தேடவும்.

**நேரடியாக இந்தியாவிலிருந்து புத்தகங்களை இறக்குமதி செய்து விநியோகம் செய்கின்றது.**

☆ திருக்கோணமலை பிரதான வீதியில் நவீன கடைத்தொகுதி
☆ இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள்
☆ பாதுகாப்பான சூழலுடன் 24 மணி நேர சேவை.
☆ ஆண், பெண் இருபாலாரும் தங்கும் வசதி.
☆ பஸ் நிலையத்திலிருந்து 200m தூரம்
☆ புகைவண்டி நிலையத்திலிருந்து 1Km தூரம்.

**வாருங்கள் பயனடையுங்கள் பலருக்கும் சொல்லுங்கள்.**

120, உட்துறைமுக வீதி,
திருக்கோணமலை.
தொ. பே. : 026-22353, 20078
பெக்ஸ் : 026-22353
பிரதான வீதி தொ.. பே. : 026-22902

என்றும் அன்புடன்
**திரு/ப. நோ. கூ. சங்கம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org